Palm Print Inc.
உங்கள் சகல அச்சுத் தேவைகளுக்கும்...
1345 Morningside ave #8, Scarborough Tel:416 284 9545

இருளிலிருந்து ஒளிக்கு...
பூபாளம்
www.boobalam.com

Dental Clinic
Every Reason to Smile...
Dr. Iru VIJAYANATHAN, BDS, MFDS, FAGD
General Dental Practitioner
3150 Eglinton Ave East
Scarborough
(Markham & Eglinton)
3151 Markham Road # 129
Scarborough
(Markham & Steeles)
416.264.3232 | 416.609.2022

21 புரட்டாதி 2012 இதழ் 3

# வடக்கில் தேர்தல்?

## தேர்தலை நடாத்துமாறு பாராளுமன்றத்தில் கோரிக்கை!




பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நடாத்தி வரும் வேலைநிறுத்தப் போராட்டத்தில்...

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடாத்துமாறு கோரி பாராளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. கடந்த செவ்வாயக் கிழமை(18.09.2012) ஐ.தே. கட்சியின் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் லஷ்மன் கிரியல்ல, முன்வைத்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாத்தில், 2013 ஆம் அண்டு பெப்ரவரி மாதமேனும் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடாத்த வேண்டுமென லஷ்மன் கிரியல்ல வலியுறுத்தி உரையாற்றினார்.

இப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய அரசாங்கத் தரப்பு பாராளுமன்ற உறுப்பினரான ஹுனைஸ் பாரூக், வடக்கில் இரு இடங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடாத்த முடியாதுள்ள நிலையில் எப்படி வட மாகாணசபைத் தேர்தலை நடாத்தவது என்ற கேள்வியை எழுப்பியிருந்தார். வடக்கில் புதுக்குடியிருப்பு, கரைத்துறைப்பற்று ஆகிய பிரதேசங்களில் முழுமையாக மீள் குடியேற்றம் நடைபெறாததனைக் காரணம் காட்டி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

த.தே.கூட்டமைப்பு உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளும் பொது அமைப்புக்களும் வடமாகாண சபைத் தேர்தலை விரைவில் நடாத்த வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்து வருகின்ற நிலையில், இப்பிரேரணை மீதான விவாதத்தில் தமிழத் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டு வரப் படவுள்ளமை பற்றி ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில த.தே.கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொள்ளாதிருந்தமை பற்றி விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விரிவுரையாளர்கள் பாதயாத்திரை

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நடாத்தி வரும் வேலைநிறுத்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக, வரும் திங்கட் கிழமை (24.09.2012) கண்டி மற்றும் காலியிலிருந்து கொழும்புக்கான பாதயாத்திரைப் போராட்டத்தை முன்னெடுக்கத் தயாராகி வருகின்றனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஜுலை மாதம் முதல் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு அரசாங்கம் எந்த தீர்வுகளையும் வழங்காத நிலையில், போராட்டத்தினை தீவிரப் படுத்தத் தொடங்கியுள்ள நிலையிலேயே பாதயாத்திரைப் பேராட்டத்தினை நடாத்த முன்வந்துள்ளனர். தேசிய வருமானத்தில் 6 சதவீத்தினை இலவசக் கல்விக்கு ஒதுக்குதல் உட்பட பல முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

விரிவுரையாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவும் பெருகிவருகிறது. கொழும்புக்கான பாதயாத்திரைப் போராட்டத்திற்கு அதிபர், ஆசிரியர் சங்கங்கள் நிபந்தனையற்ற ஆதரவினை வழங்வுள்ளதாகத் தெரிவித்திருப்பதுடன், பேராட்டத்தில் பங்கெடுக்குமாறு அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு அழைப்பும் விடுத்துள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், விரிவுரையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து, பல்கலைக் கழகங்களின் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி புதன் கிழமை (19.09.2012) கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தது. இப்போராட்டத்தில் கலந்து கொண்டு பஸ்ஸில் சென்று கொண்டிருந்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுமுள்ளார். எனினும் அவர்கள் தொடர்ந்து போராட்டங்களை நடாத்தப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை பேராதனைப் பல்கலைக்கழ மாணவர்கள் சிலர், பல்கலைக்கழகப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு பல்கலைக்கழகங்களை விரைவில்

தொடர்ச்சி 5ம் பக்கம்



இந்த வாரம் boobalam.com இல்...

சீனா, ஸ்ரீ லங்கா, 16 உடன்படிக்கைகள்
SONYயிற்கு காத்திருக்கும் Olympus
இந்தியாவின் 100வது வெற்றிகர satellite ஏவல்


"Make Your Dream Home Come True"
Mississauga Branch
Monte Carlo Corporate Centre
7045 Edwards Boulevard, Suite 201
Mississauga, Ontario L5S 1X2
905-565-9200
Toronto Office
Morneau Sobeco Centre
895 Don Mills Rd., Ste. 202
Toronto, Ontario M3C 1W3
416-391-3232
Param Gnanaswaran
REAL ESTATE BROKER
Direct: 416 - 230 - 1107
RIGHT AT HOME REALTY INC.
REAL ESTATE BROKERAGE

Keeth Appliance & Heating,
Air conditioning Services
Central Air coditioning, furnace repair and installation,
Fridge/Washers/Dryers, Dishwashers/Stoves

Certified technicians! Reasonable rates! Reliable service!
Keeth
Repair Technician
416.995.3938

பூபாளத்தில்
விளம்பரம் செய்ய
Tel: 416 284 4004
e-mail: boobalam@ymail.com

# அரிசியில் நஞ்சு

நாங்கள் உண்ணும் அரிசியில் ஆர்சனிக் என்னும் நச்சு மூலப்பொருள் அதிகரித்து வருவதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். கொன்சியூமர் றிப்போட்ஸ் எனப்படும் சஞ்சிகை சமீபத்தில் கடைகளில் விற்பனையாகும் அரிசிவகைகளையும் அரிசியைமூலமாகக் கொண்ட உணவுப் பொருட்களையும் பகுப்பாய்வு செய்தது. அதில் அரிசியில் உள்ள ஆர்சனிக்கின் அளவு அதிகமாக உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து உணவுப் பொருட்களைக் கட்டுப்படுத்தும் அமெரிக்க அரச நிறுவனமான சமஷ்டி உணவு, மருந்து நிர்வாக அமைப்பு, இது பற்றிக் கவனத்தில் எடுத்துள்ளது.

தற்போது 1200 வகையான அரிசி உணவுப் பொருட்களில் இந்த அமைப்பு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

நெற்பயிர் நீர் தேங்கி நிற்கும் பகுதிகளில் வளர்வதால், இலகுவாக நெற்பயிர் ஆர்சனிக் போன்ற நஞ்சுப் பொருட்களை உறுஞ்சுகிறது. இது இறுதியில் நெல்லில் சேமிக்கப்படுகிறது. நீரில் இயற்கையாக உள்ள ஆர்சனிக் அரிசியில் இருந்தால் அது கழிவாக வெளியேற்றப்படும். ஆனால் கிருமிகொல்லிகள், களைகொல்லிகள் போன்றவற்றில் இருக்கும் ஆர்சனிக் உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியது. நீண்ட காலத்திற்கு ஆர்சனிக் கலந்த உணவு உண்ணப்பட்டால் புற்றுநோய் அபாயம் ஏற்பட வாய்ப்புண்டு.

அமெரிக்க உணவு, மருந்துப் பொருள் நிர்வாக அமைப்பு தலைமையதிகாரி இது பற்றிக் கூறுகையில் பாவனையாளர்கள் பல்வேறு வகையான தானியங்களை உண்ண வேண்டும் என்றும் இது தொடர்ந்து ஒரே வகையான தானியங்களை உண்ணுவதில் ஏற்படக் கூடிய ஆபத்துக்களைக் குறைக்கும் என்றும் கூறியுள்ளார்.

இதுவரையில் 200 மாதிரிகளில் கண்டறியப்பட்ட ஆர்சனிக்கின் அளவு பற்றி அமெரிக்க உணவு மருந்துகள் நிர்வாக அமைப்பு வெளியிட்டிருக்கிறது. அதில் சராசரியாக ஒருவர் உட்கொள்ளும் ஒரு நேர உணவில் 3.5 முதல் 6.7 மைக்ரோகிராம் ஆர்சனிக் உள்ளது. ஆனால் கொன்சியூமர் றிப்போட் சஞ்சிகையின் விஞ்ஞானிகளின் ஆய்வுப்படி 8.7 மைக்ரோ கிராம் காணப்பட்டது. கொன்சியூமர் றிப்போட் சஞ்சிகை 223 மாதிரிகளில் ஆய்வுகளை மேற்கொண்டது. அதன் ஆய்வுகளின்படி மண்ணிற அரிசியில் வெள்ளை நிற அரிசியை விட அதிகளவில் ஆர்சனிக் காணப்பட்டது. அதை விட, அமெரிக்க தென் மாநிலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியில் கலிபோர்னியா, ஆசியாவில் உற்பத்தி செய்த அரிசிகளை விட அதிகளவில் ஆர்சனிக் காணப்பட்டது.

அரிசியில் என்ன அளவு ஆர்சனிக் இருக்க அனுமதிக்க முடியும் என்று எந்த அளவும் இதுவரை வரையறை செய்யப்படவில்லை.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், அவற்றில் காணப்பட்ட முடிவுகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாது என்றே அமெரிக்க உணவு நிர்வாகம் கூறுகிறது.

# தாயகத்திற்கு இலவச பயணம்!

இஸ்ரேலுக்கு வெளியில் வாழுகின்ற யூத மக்கள் மத்தியில் தாங்கள் காலப்போக்கில் யூதப்பண்பாடுகளை இழந்துவிடுவோமா என்ற ஏக்கம் உண்டு. இஸ்ரேலுடன் தொடர்புகளை வைத்திருப்பதன் மூலம் யூதப்பண்பாடுகளைப் பேணலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள். இதற்காக யூத அமைப்புக்கள் இஸ்ரேலுக்கான பயணங்களை ஊக்குவிக்கிறார்கள். இலவசப் பயணங்களைக்கூட யூத அமைப்புக்கள் அமெரிக்காவிலிருந்தும் ஏனைய நாடுகளிடமிருந்தும் ஏற்பாடு செய்கின்றன. ஒவ்வொரு யூத இளைஞருக்கும் இளைஞிகளுக்கும் 10நாளுக்கான இந்த இலவசப் பயணங்கள் கிடைக்கின்றன. கடந்த வருடம் மட்டும் 35,000 பேர் வடஅமெரிக்காவிலிருந்து இந்தத் திட்டத்தில் இஸ்ரேலுக்குச் சென்றனர்.

இதுபற்றிய விரிவான செய்தியொன்றை சமீபத்திய எக்கொனமிஸ்ட சஞ்சிகையில் படித்த "செயல்புயல்"களான தமிழர் சிலர் "இந்த விடயம் இவ்வளவு காலமும் நமக்குத் தோன்றாமற் போய்விட்டதே" என்று அங்கலாய்க் கிறார்கள். சும்மா பேசிப்பேசியே காலத்தைக்கழித்துவிட்டோமே! இனியாவது உருப்படியாக ஏதாவது செய்யவேண்டாமா?
பச்சைத் தண்ணியிலை தேசியத்தைக் கட்ட முடியாது. எல்லா விடயங்களிலும் யூத இன மக்களைப் பின்பற்றத் துடிக்கிறோம். அவர்கள் யூத காங்கிரஸ் வைத்தால் நாங்களும் காங்கிரஸ் தொடங்கிறோம். தாயகத்திற்கு இலவச பயணம் என்பது எவ்வளவு அருமையான திட்டம். இதன்மூலம் வெளிநாடுகளில் பிறந்த பிள்ளைகளுக்குத் தாயகத்தைக் காட்டி அங்கு சில வாரங்களாவது வாழவிட்டால் அவர்களிடம் தமிழ்ப்பண்பாடு வளரும், தமிழைப் பேசப் பழகுவார்கள், தாயகத்தின் மீது பாசமும் பிறக்கும்.

இவ்வாறுயோசித்துதமதுமடிக்கணனியில் தாயகப் பயணத்திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என ஆய்வு செய்து வருகின்றனர். இந்தத் திட்டத்தை ஸ்பொன்சர் செய்வதற்கு பல வர்த்தகப் பிரமுகர்கள் நானோ நீயோ என்று முண்டியடிப்பதாகக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.
இலவசப் பயணம் என்றவுடன் உடனடியாகப் பெட்டிபடுக்கைகளை அடுக்கவேண்டாம்! இந்த இனிப்பான செய்தி நிறைவேற சில வருடங்களாவது பிடிக்கும் என்பது கொஞ்சம் கசப்பாகத்தான் இருக்கிறது. இப்போதைக்கு விமான ரிக்கெற்றின் விலையைக் குறைத்தாலே பெரிய விடயம் என்று அழுகிறார் சமீபத்தில் தாயகம் சென்ற தமிழர்.

**மகேஸ்**

# பத்துப் பிள்ளை பெத்தவளுக்கு தலைப்பிள்ளைகாரி ...

**மகேஸ்**

கிறீஸ்துவுக்குப்பின் 1977ம் ஆண்டு. பொதுத்தேர்தல் ஒன்று இலங்கையில் வருகிறது. முதன்முதல் அந்தத் தேர்தலைத்தான் உலகம் பார்க்கத் தொடங்கியதாகவும் அதன் பிறகு வந்த ஒவ்வொரு தேர்தலையும் உலகம் பார்த்து வருவதாகவும் தமிழ்த்தலைவர்களும் தமிழ் ஊடகங்களும் கூறிவருவதனை வரலாற்றாசிரியர்கள் பதிவுசெய்துள்ளனர். மரம் பழுத்தால் வௌவால் வரும் என்பார்கள். ஆனால் 1977இல் வௌவால்களைக் கூட்டணி கூட்டிவந்தது. கூட்டணி அன்றைய சோவியத்யூனியனைச் சேர்ந்த சிலரை தமது அலுவலகத்திற்கு அழைத்துவந்தது. வந்தவர்கள் பல நாடுகளுக்குச் சென்று வந்த அனுபவசாலிகள். வந்தவர்கள் கூட்டணியின் அமைப்பு பற்றியும் அதன் அங்கத்துவர் தொகை பற்றியும் கேட்கத்தொடங்கினார்கள். கூட்டணி தலைவர்கள் ஒருவரின் முகத்தை ஒருவர் பார்த்தார்கள். ஒருவாறு கூட்டம் முடிந்தது.

"இது என்னடா! அமைப்பு என்கிறாங்கள். அங்கத்துவர் என்கிறாங்கள். அது ஒன்றுமில்லாமல் நாங்கள் டொனமூர் காலத்திலிருந்து தேர்தலில் அமோக வெற்றிபெற்று வாறம். பத்துப் பிள்ளை பெத்தவளுக்கு தலைப்பிள்ளைகாரி முக்கிக்காட்டின கதையாகக் கிடக்கு. இவ்வாறு கூட்டணி தலைவர்கள் தங்களுக்குள் கதைத்திருக்கக் கூடும்.
சோவியத் குழுவினர் கூட்டணி பற்றி கூறியதுதான் இங்கு கவனிக்க வேண்டிய விடயம். சோவியத் பிரதிநிதிகள் காலஞ்சென்ற வ. பொன்னம்பலத்திடம் (விபி) பின்பு தனிப்பட்ட முறையில் பேசும்போது "Their ambitions are great, but their organization is zero" (கூட்டணியின் நோக்கம் ஏதோ பெரிசாகக் கிடக்கிறது. ஆனால் அமைப்பு பூச்சியமாக இருக்கிறது) என்று கூறினர்.
கூட்டணி தலைவர் காலஞ்சென்ற தர்மலிங்கம் எம்பி, வ. பொன்னம்பலம் (விபி) கூட்டணியில் சேர்ந்த போது கூறிய கருத்து மிகவும் சுவையானது. தர்மர் விபியிடம் சொன்னார் "நீங்கள் இருந்த கம்யூனிஸ்ட் கட்சி மாதிரி கூட்டணியில் அங்கத்துவர், அமைப்பு என்று எல்லாம் எதிர்பார்த்து வந்தையள் என்றால் ஏமாந்து போவியள்."
மேலே கூறப்பட்ட பின்னணியில் இன்றைய கூட்டமைப்பை நாம் பார்க்க வேண்டிய தேவையுள்ளது. கூட்டமைப்பை அமைப்புரீதியாகப் பலப்படுத்தவேண்டும் என்ற கூப்பாடு சமீபத்தில் எழுந்தது. அந்தக் கூக்குரல் பின்னர் தன்பாட்டிலேயே செத்துவிட்டது. உண்மையைச் சொல்லப்போனால் தமிழ்கட்சிகளுக்கு அமைப்பு அங்கத்துவர் என்று ஒன்றும் இருந்ததாக வரலாறு கிடையாது. தமிழ்த்தலைவர்களுக்கு அதைச் செய்யவேண்டிய தேவையுமில்லை. திருவிழாக்காலத்துக் கடலை வியாபாரி கள் மாதிரி அவர்கள் தேர்தல் நேரத்தில் தலைகாட்டுவார்கள்."மானம் போனதடா மறத்தமிழா!" என்று பேசித் தேர்தலில் வெற்றிபெறுவார்கள். யாராவது முக்கிக்காட்டுவது பிரயோசனமில்லாத வேலைதான்!

# தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் காணாமல் போனவர்களின் விடுதலைக்காகத் தொடரும் போராட்டங்கள்,


கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் காணமல்போன உறவுகளை மீட்டுத்தருமாறு கோரியும் தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்ற போதும், அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமலே இருந்து வருகிறது.

கடந்த 12.09.2012 புதன் கிழமை சர்வதேச கைதிகள் தினத்தன்று, கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் காணமல் போனவர்களையும் விடுவிக்குமாறு கோரி வவுனியா குருமன்காடு காளிகோவிலில் 1008 தேங்காய் உடைத்து சிறப்புப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது. இப்பிரார்த்தனையில் பெருமளவான மக்களும் அரசியல் தலைவர்களும் கலந்து கொண்டனர். பிரார்த்தனையில் கலந்த கொண்ட உறவினர்கள் குறிப்பாக பெருமளவான பெண்கள் தேங்காய்களை கையில் ஏந்தி உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி அழுது புலம்பி காளி அம்மனிடம் வேண்டுதலில் ஈடுப்பட்டனர். சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு த.தே.கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பனர் சிவசக்தி ஆனந்தன் தலைமை தாங்கியதுடன்

6ம் பக்கம்...



# மெதுமெதுவாக வாயைத் திறப்போம்!



## ஏடு இட்டோர் இயல்

பெரியோர் வழி நட!

ஊரோடு ஒத்தோடு!

எமது சமூகத்தில் எங்களுக்கு சிறுவயதிலிருந்தே சொல்லித் தரப்படுபவை இவை. பெரியவர்கள் தங்கள் அனுபவங்களால் பெற்ற அறிவினால், வழிகாட்டுவதற்கு தகுதியானவர்கள் என்பதே எங்கள் சமூகத்தின் நிலைப்பாடு. அவர்களின் வழிகாட்டலை எந்தக் கேட்டுக் கேள்வியும் இன்றி விசுவசித்து அதன்படி ஒழுகுதல் என்பது சமூகக் கடமையாகவே கொள்ளப்படுகிறது.

மறுபுறத்தில் ஊரோடு ஒத்தோடுவது என்பதே 'எல்லாரும் செய்வதால் அதில் ஏதோ விசயம் இருக்க வேண்டும்' என்ற உணர்வினால் ஆனதாக இருக்கலாம். அதைவிட, ஊர் செய்கின்ற ஒன்றுக்கு முரணாக நடந்தால், தங்களுக்கு கறுப்பு ஆடு என்று முத்திரை குத்தப்படும் என்ற பயத்தினாலும் இருக்கலாம்.

ஆனால், பெரியவர்களின் வழிகாட்டலின்படி தான் எங்கள் சமூகம் இதுவரை காலமும் நடந்திருந்தால், நாங்களும் கோவணாண்டிகளாக அம்பும் வில்லுடனும் தான் இருந்திருப்போம். அத்தோடு எந்தக் கேள்வியும் இன்றி, ஊரோடு ஒத்தோடுவது தான் எங்கள் பண்பாடு என்றால் நாங்கள் செம்மறிகளாகத் தான் இருக்க வேண்டும்.

எங்கள் சமூகம் சமூக விதிமுறைகளை யாரும் மீறுவதை ஏற்றுக் கொள்வதில்லை. இதனால், பலரும் 'எனக்கு ஏன் வீண் பிரச்சனை?' என்று மந்தைகள் போல, ஊரோடு ஒத்தோடுவது அனாவசியமான தொல்லைகளைத் தவிர்க்கும் என்ற எண்ணத்தில், வாயை மூடிக் கொண்டே ஊருக்குப் பின்னால் ஓடிக் கொண்டே இருக்கிறார்கள்.

எங்கள் சமூகத்தில் பெரியோர்கள் முன்னால் எதற்குப் பின்னாலோ ஓடிக் கொண்டிருந்தார்கள். 'அவன் விசயம் தெரிஞ்சவன், ஏதோ விசயம் தெரிஞ்சு தானே ஓடுறான்' என்று நாங்களும் பின்னால் ஊரோடு ஒத்தோடிக் கொண்டிருந்தோம்.

விளைவு?

இன்று மீள முடியாத அதல பாதாளத்தில் எல்லோரும், முழுத் தமிழினமும், வீழ்ந்து போயிருக்கிறோம்.

எமது சமூகம் குரூரமானது. எமது சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நம்பிக்கைகளை கேள்வி கேட்பவர்களை அது மன்னிப்பதில்லை. சாதி, சமயங்களுக்கு எதிரான போராட்டங்களை நடத்திய கம்யூனிஸ்டுகளையும் சரி, ஆயுதப் போராட்டத்துடன் கூடிய தமிழீழத்தை கேள்வி கேட்டவர்களையும் சரி, சமூகம் தீண்டத்தகாதவர்களாகத் தான் பார்த்திருக்கிறது.

அரசியல் மட்டுமல்ல, சமூக மாற்றத்தை வேண்டியவர்களைக் கூட, ஏளனப் பார்வையுடன் தான் எமது சமூகம் பார்க்கிறது. சீதனம் வாங்க மாட்டேன் என்று ஒருவன் சீர்திருத்த நோக்கில் சொன்னாலும், 'உவருக்கு ஏதோ குறை போல' என்று வக்கிரபுத்தியுடன் சொல்வது தான் எங்கள் சமூகம். எங்கள் சமூகத்திற்காக நன்மை செய்ய யாராவது வந்தாலும் 'உவர் தனக்கு லாபம் இல்லாமல் உதைச் செய்யிறாரோ?' என்று சந்தேகம் கொள்வது தான் எங்கள் சமூகம். இங்கே எங்கள் சமூகம் செய்கின்ற மோசடிகளைப் பற்றிச் சொன்னாலேயே 'உவருக்கு என்ன பிரச்சனையாம்? தன்ரை காசையே தாறார்?' என்ற கேள்வி தான் எழும்.

இதனால், உண்மையான சமூக நோக்கம் கொண்டவர்கள் எல்லாம் விலகிப் போக... ஏமாற்றுக்காரர்கள் தான் இன்றைக்கு எங்கள் சமூகத்தில் கோலோச்சுகிறார்கள். எங்கள் சமூகம் இன்றைக்கு தனது இனத்தைப் பற்றிய கவலை இல்லாமல், வெறும் பாசாங்கு மட்டும் காட்டிக் கொண்டிருக்கிறது. எமது இனம் நன்றாகவே நடிக்கக் கற்றுக் கொண்டு விட்டது.

இன்று கூட, ஒரு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்கு எதிராக எதையும் சொல்ல முடியவில்லை. துரோகி, கைக்கூலி, காட்டிக் கொடுப்பவன், வளர்ப்புப் பிராணி என்ற பட்டங்கள் தொடக்கம் மரபணு மீதான சந்தேகம் வரையில்... வசைகளுக்கு ஆளாகாமல், எந்த மாறான கருத்தையும் சமூகத்தில் சொல்ல முடியவில்லை.

விருப்பமோ, இல்லையோ, ஊரோடு ஒத்தோடித் தான் ஆக வேண்டும்!

பெரியோர் வழி நடந்து தான் ஆக வேண்டும்.

ஊரோடு ஒத்தோடுவது என்பது ஒரு கால கட்டத்தில் மிகவும் கொடூரமாக அமுல்படுத்தப்பட்ட ஒன்று. ஓடாதவர்கள் கறுப்பு ஆடுகளாய் இனம் காணப்பட்டு, பலியிடப்பட்டார்கள். மற்ற ஆடுகள் பலியிடப்பட்டதைக் கண்டவர்கள் பலர் வாயை மூடிக் கொண்டார்கள். வேறு பலர், தாங்கள் பலியிடப்படாமல் இருக்க, நடிக்கத் தொடங்கினார்கள். நடிக்கத் தொடங்கியவர்கள் நல்ல பேர் வாங்க, புகழ்ந்து ஏத்தத் தொடங்கினார்கள்.

வாயைத் திறப்பது சாப்பிடவும், கொட்டாவி விடவும் மட்டும் தான்!

தேவையென்றால் தேவனைத் துதிக்கவும், துரோகியைத் திட்டவும் திறக்கலாம்.

சமூகம் ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றத்தை செய்வது பலவந்தமாக மறுக்கப்பட்டது. 'பெரியோர்' சொல்படி கேட்டு, ஊரோடு ஒத்தோடுவது என்பது உத்தியோகபூர்வமாக கடுமையாக அமுல்படுத்தப்பட்ட கொள்கையாகவே மாறி விட்டிருந்தது.

யுத்தம் முடிந்து மூன்று ஆண்டுகளாகி விட்டன. இன்னமும் யாரும் வாயைத் திறக்கிறார்கள் இல்லை. வாயைத் திறக்கவும் முடியவில்லை. வாயைத் திறப்பவனைச் சந்தேகத்துடன் பார்த்து, 'அரசாங்கம் பணம் கொடுக்காமல் வாயைத் திறந்திருப்பானோ?' என்று எவனாவது கிளப்பும் வதந்தியை நம்பும் அளவுக்குத் தான் எங்கள் சமூகம் இருக்கிறது. தமிழன் சொந்தமாக வாயைத் திறக்கும் அளவுக்கு சூடு சுரணை இல்லாதவன், இவனுக்கு வேறு யாரோ பணம் கொடுத்துத் தான் இவன் வாயைத் திறப்பான் என்கிற அளவுக்குத் தான் எங்கள் சமூகம் இருக்கிறது!

'வாயை மூடிக் கொண்டிரு, உனக்கு ஏன் தேவையில்லாத பிரச்சனை?'

இதைத் தான் தாய்மாரும், மனைவிமாரும் இந்த மறத் தமிழர்களுக்குச் சொல்லி வீரப்பால் ஊட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு சமூகத்தின் அழிவிற்கான காரணங்களைப் பேசுவது கூட 'தேவையில்லாத பிரச்சனை' ஆகி விட்டது.

எங்கள் பிள்ளைகள் எங்கள் கைகளிலிருந்து பறித்துச் செல்லப்பட்ட போது, கூக்குரலிட்டு அழக்கூட எங்களால் வாயைத் திறக்க முடியவில்லை.

போர்க் களத்தில் பலியான எங்கள் பிள்ளைகளின் உடல்கள் வீடு வந்தபோது, கதறி அழவும் எங்களால் வாயைத் திறக்க முடியவில்லை.

நாங்கள் வாயைத் திறக்காதன் காரணம், பால் மணம் மாறாப் பாலகன் கையில் வேலைக் கொடுத்து போர்க்களம் அனுப்பிய புறநானூற்று பாரம்பரியம் அல்ல, வாயைத் திறந்தால் வாய்க்குள் குண்டு போகலாம் என்ற பயம் மட்டும் தான்!

'எனக்கேன் தேவையில்லாத பிரச்சனை? தலை காக்க, நாமும் சேர்ந்து நடிப்போம்'

பெரியோர் சொற்படி ஒழுக வேண்டியதன் கட்டாயம் எல்லோருக்கும் தெளிவாகப் புலப்படுத்தப்பட்டது. சமூகம் ஊரோடு ஒத்தோடியது. வாயைத் திறக்காமல், கண்ணை மூடிக் கொண்டே ஓடிப் போய் நந்திக்கடலில் விழுந்தது!

பலர் தாங்கள் ஏதோ 'மரணத்துக்கு அஞ்சா மாவீரர்கள் போல' வாய் வீசிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் ஒன்றும் வாய்மூடிகள் இல்லை, அரசாங்கத்திற்கு எதிராக வாயைத் திறந்திருக்கிறோமே என்று வீரவசனம் பேசுகிறார்கள்.

இதைக் கேட்டதும் பழைய துணுக்கு ஞாபகம் வருகிறது.

அமெரிக்கனும் ரஷ்யனும் சந்தித்த போது, அமெரிக்கன் சொன்னான், 'எங்கள் நாட்டில் சுதந்திரம் இருக்கிறது. நான் எங்கள் நாட்டு ஜனாதிபதியின் வீட்டுக்கு முன்னால் போய், 'எங்கள் ஜனாதிபதி ஒரு முட்டாள்' என்று திட்டலாம்.'

ரஷ்யன் சொன்னானாம், 'உதென்ன பெரிய விசயம். எங்கள் நாட்டிலும் தான் சுதந்திரம் இருக்கிறது. எங்கள் நாட்டு ஜனாதிபதியின் வீட்டுக்கு முன்னால் போய் நின்று 'அமெரிக்க ஜனாதிபதி ஒரு முட்டாள்' என்று திட்டலாம்.'

இன்றைக்கும் இது தான் நடக்கிறது.

உலகில் எந்த மூலையில் இருந்தும் யாரும் மகிந்தவை கழுவில் ஏற்றுவதாக சபதம் செய்யலாம். இந்தியாவுக்கு சவால் விடலாம். நோர்வேயை மிரட்டலாம். ஒபாமாவுக்கு எச்சரிக்கை விடலாம். துரோகிகளுக்கு மரண தண்டனைத் தீர்ப்பும் வழங்கலாம்.

இது எந்த வடி கட்டின முட்டாளும் செய்யக் கூடியது தான். அதைத் தான் இவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

செய்து முடிந்த பின்னால், வெள்ளைவான் கவலையின்றி ஊருக்கும் போய் வரலாம்.

ஆனால் மண்ணின் மைந்தர்களுக்கு எதிராக...

பகிரங்கமாக, வாயே திறக்க மாட்டார்கள்!

திறந்தால் துரோகி என்ற பட்டம் எந்த மூலையில் இருந்து வரும் என்று தெரியாத பயம்.

ஆனால் தனியே பேசும்போது மட்டும், மண்ணின் மைந்தர்கள் பற்றிக் கடுமையான விமர்சனம். வெளியில்

பூபாளம் வார இதழ் Palm Springs Newspapers Ltd நிறுவனத்தினரால் ரொறன்ரோ, கனடாவில் வெளியிடப்படுகிறது.
இந்த இதழில் வெளியாகும் ஆக்கங்களில் உள்ள கருத்துக்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு. அவை பூபாளத்தின் கருத்தைப் பிரதிபலிப்பனவாய் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை. ஆக்கங்களின் கருத்துச் சிதைவுறாமல், மாற்றங்களைச் செய்யும் உரிமை ஆசிரியர் குழுவுக்கு உண்டு.
வெளியாகும் விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களே பொறுப்பு.
Boobalam is published by Palm Springs Newspapers Ltd.
1345, Morningside Ave #8, Scarborough, On, M1B 2T3 Tel: 416 284 4004 e-mail: boobalam@ymail.com Web:www.boobalam.com
Palm Springs Newspapers Ltd is a division of Palmgrove Media Group Inc.

சொல்லப் பயம்.

இதுதான் இந்த வாய்ச் சொல் வீரர்களின் இலட்சணம்.

ஒரு காலத்தில் ஊரோடு ஒத்தோடா விட்டால், ஊருக்கு வரும் போது கவனிக்கப்படும் என்ற எச்சரிக்கை எல்லோருக்குமே ஞாபகப்படுத்தப்பட்டது. பயத்தினால் பணத்தைக் கொடுத்தவரும் விடுதலைக்கு விரும்பிக் கொடுத்ததாய் நடித்தார். போராட்டத்திற்கு நானும் பணம் கொடுத்தேன் என்று வன்னியில் சோதனைத் தடை முகாமில் நெஞ்சை நிமிர்த்தினார்.

இன்றைக்கு, தான் இப்படி பனிக் குளிருக்குள் உழைத்து கொடுத்த பணத்திற்கு என்ன நடந்தது என்று கேள்வி...?

வாயே திறக்க மாட்டார்!

எனக்கேன் தேவையில்லாத வேலை? மற்றவை பேசாமல் இருக்கேக்கை எனக்கேன் வீண் பிரச்சனை?

வாயை மூடிக் கொண்டு, பேசாமல் உன்ரை வேலையைப் பார் என்ற மறத்தமிழச்சிகளின் கொங்கைகளில் வீரப்பால் உண்ட மறவர்கள் தானே!

மௌனம் தலை காக்கும்!

ஆனால், ஆளுக்காள் பேசிக் கொண்டிருக்கும்போது மட்டும், பொருமலகள் மற்றவர் காதுக்குக் கேட்காமல்!

அடக்குமுறை அதிகாரங்கள் செய்வது இதைத் தான். அதிகாரம் தங்கியிருப்பது புலனாய்வுத் துறையில் மட்டும் தான். புலனாய்வுத் துறைக்கு எதிரியை விட, உள்ளே இருப்பவன் மீது தான் பயம் அதிகம். அதற்கு சரியான வழி, ஆளை ஆள் சந்தேகப்பட வைப்பது.

யார் உண்மை பேசுவார்? எல்லோருமே நடிக்கப் பழகியே ஆக வேண்டும்.

இப்படி எத்தனை நாளைக்கு தொடரப் போகிறது இந்த நடிப்பு?

யாருக்கு இப்போது பயப்படுகிறோம்? எந்த நிழலைப் பார்த்து இத்தனை பயம்?

கடைசி வரையும் தான் கொண்ட நோக்கத்திற்காக நின்று உயிர் நீத்த தலைவனையும் உயிரைத் துச்சமாய் மதித்து இனத்திற்காய் போராடிய போராளிகளையும் காட்டிச் சேர்த்த பணத்தை விழுங்கி ஏப்பம் விட்ட கூட்டத்திற்கா இத்தனை பயம்?

இதுவரை காலமும் பெரியோர்களின் வழி நடந்துதான் இந்த இழிநிலைக்கு வந்திருக்கிறோம். ஊரோடி ஒத்தோடித் தான் படுகுழிக்குள் விழுந்திருக்கிறோம்.

இந்த அழிவிலிருந்து மீண்டு வருவதாக இருந்தால் நாங்கள் வாயைத் திறக்கத் தொடங்க வேண்டும்.

கேள்விகளுக்கு அப்பாற்பட்ட தேவர்களும் இல்லை, புனிதர்களும் இல்லை.

எல்லாரையும் எல்லாவற்றையும் கேள்விக்கு உள்ளாக்க வேண்டும்.

பெரியோர்களின் வழிகளை புதியவர்கள் கேள்வி கேட்டதால் தான் உலகம் வளர்ந்தது. ஊரோடு ஒத்தோடாமல், வேறு பாதைகளை வகுத்தவர்களால் தான் உலகம் செழித்தது.

எங்கள் முன்னால் உள்ள கேள்விகள் பல.

மகிந்தவை 'யதார்த்தவாதி' என்று கூறி அரசு கட்டில் ஏற்றியது சரியா?

கருணாவைத் துரோகி என்று பலம் இழந்தது சரியா?

இந்தியாவைப் பகைத்துக் கொண்டு இறுதியில் கையறுந்தது சரியா?

முழு உலகத்தையும் மதிக்காமல் திமிருடன் தனிமைப்பட்டு நின்றது சரியா?

தோளோடு தோள் கொடுக்க சகோதரர்களை அழைக்காமல், மற்ற இயக்கங்களை அழித்தது சரியா?

போராட்டத்தின் பெயரால் எங்களுக்குச் சொல்லப்பட்டவை எல்லாம் உண்மைகளா?

எங்கள் இனத்தின் தலைவிதியையும் எதிர்காலத்தையும் ஒரு தனிமனிதனின் கையில் திணித்தது சரியா?

இதெல்லாம் எங்கள் முன்னால் உள்ள கேள்விகளில் சில.

இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல இன்றைக்கு யாரும் இல்லை. பதில் சொல்ல ஆளில்லை என்பதால் கேள்விகளைக் கேட்பதை நிறுத்த வேண்டியதில்லை.

எங்கள் தவறுகளிலிருந்து நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்றால், நாங்கள் மனம் திறந்து பேச ஆரம்பிக்க வேண்டும்.

இதில் 'உப்படியெல்லாம் நடக்கும் என்று எங்களுக்கு எப்போதோ தெரியும்' என்று எங்கள் மேதாவித்தனத்தை மெச்சவும் தேவையில்லை.

'எங்களுக்கு உப்பிடியெல்லாம் நடந்தது என்று தெரியாது' என்ற பாசாங்கு காட்டி நடிக்கவும் தேவையில்லை.

'சரி, நடந்தது நடந்து விட்டது, ஆனால் இன்னொரு தடவை இப்படியொரு நிலைமை வர விடக் கூடாது. எனவே, என்ன பிழை நடந்தது என்பதை நாங்கள் அறிந்து கொண்டால் மட்டுமே, இன்னொரு தடவை அந்தப் பிழை நடக்காமல் பார்க்க முடியும்'

இந்த எண்ணம் எங்கள் மனதில் வர வேண்டும்.

முன்பு தான், போராட்டம் நடக்கிறது, கேள்விகள் கேட்டால் போராட்டம் பின்னடையும் என்றெல்லாம் பெரியவர்கள் சொன்னார்கள். நாங்களும் ஊரோடு ஒத்தோடினோம். விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் எங்கள் அடிப்படை மனித உரிமைகளை தாரை வார்த்தோம்.

இன்றைக்கு எதுவுமே இல்லை. இப்போது பேச என்ன தயக்கம்?

எங்கள் சமூகம் இன்னொரு தடவை படுபாதாளத்தில் விழாமல் இருக்க வேண்டும் என்றால், எவருக்கும் பயமில்லாமல், நாங்கள் மெதுமெதுவாக வாயைத் திறக்க ஆரம்பிக்க வேண்டும்.

# கூடங்குளத்தில் மாறுகிறது உலகம்

## குவார்னிகா



கூடங்குளம் அணுமின்நிலையத்தை எதிர்த்து கடந்த 15 மாதங்களாக அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் மிகுந்த ஆவேசமாகப் போராடி வருகிறார்கள். நீண்டகாலத்திற்குப் பின் மக்கள் போராட்டம் ஒன்றை இந்திய அரசு எதிர்கொள்கிறது. அணுமின்நிலையத்தின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வரும் நிலையில் அணுமின்நிலையத்தை முடுவதனால் மிகுந்த மின்சாரப் பற்றாக்குறை வரும் எனவும் மிக அதிகமாக தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்படும் எனவும் அரசு காரணம் சொல்லி வருகிறது.

ஆனால் போராட்டக் குழுவோ கூடங்குளம் அணுமின்நிலையம் பாதுகாப்பானதல்ல எனவும் அங்கு விபத்து ஏற்பட்டால் மிகப்பெரியளவு மக்கள் தொகையினர் பாதிக்குள்ளாவார்கள். அவர்களுக்குரிய இழப்பீடு குறித்து எந்த பதிலும் யாரிடமும் இல்லை எனவும் தெரிவிக்கின்றனர். இந்த அணுமின்நிலையத்துடன் தொடர்புடைய அதற்கு யுரேனியம் வழங்கும் ரஸ்சிய நிறுவனமோ தனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிவித்திருக்கிறது என்றும் அரசு மீது குற்றஞ்சாட்டுகிறார்கள். மக்களோ உண்ணாவிரதம். நடைபவனி. கடலுக்குள் கழுத்தளவும் இறங்கி இருத்தல். மண்ணுக்குள் புதைந்திருத்தல் என்று அகிம்சாவழியில் பல போராட்டங்களில் மாறி மாறி ஈடுபடுகிறார்கள். மிகப்பெரியளவு மக்கள் தொகை போராட்டத்தில் ஈடுபடுவது இந்திய அரசை கொஞ்சம் குழம்பிப் போகத்தன் செய்திருக்கிறது. தமிழ்நாட்டில் திமுகவும் அதிமுகவும் வழமைபோலவே இதுவரை அறுதியான எந்தக் கருத்தையும் சொல்லவில்லை. தன்னுடைய நலன் தாண்டி அது எதையும் செய்யப்போவதில்லை.

ஆனால் இந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கும் போராட்டத்தை வழி நடத்தும் உதயகுமாரோ இறுதிவரை போராட்டத்தைக் கைவிடுவதாக இல்லை. தம் உயிர் இருக்கும் வரை அணு உலையை இயங்க விடமாட்டோம் என்று கூறிவிட்டார். அவர் அண்மையில் தொலைக்காட்சி ஒன்றுக்குக் கொடுத்த நேர்காணலில் அணு உலை குறித்த அபாயங்களைச் சொல்லியதுடன் கூடங்குளம் அணு உலை பாதுகாப்பானதல்ல என்பதற்கான பல காரணங்களை முன்வைத்திருக்கிறார். தான் யப்பானில் ஃபுக்கோசிமாவிற்குப் போய் வந்ததாகவும் அதன் அழிவுகளை நேரில் பார்த்ததாகவும் சொன்னார். உலகில் யப்பான் உள்ளிட்ட பல நாடுகள் அணு உலையை எதிர்த்து வருகின்றன. அமெரிக்காவில் கூட புதிய அணுஉலைகள் உருவாக்குவதில்லை என்றுசொன்னார்.

உதயகுமார் மீது அரசு பலநூறு வழக்குகளைப் பதிவு செய்து முதற் குற்றவாளி ஆக்கியுள்ளது. இன்று தலைமறைவாகியிருக்கும் உதயகுமாரை எப்படியாவது கைது செய்து போராட்டத்தை முடக்க அரசு கடும் பிரயத்தனம் எடுக்கிறது. ஆனால் மக்கள் கொந்தளிப்புக்கு முன் உதயகுமார் என்ற தனி நபர் மீது தொடுக்கும் எந்த எதிர்ப்புணர்வும் செல்லுபடியாகும் எனத் தெரியவில்லை. இன்னொருபக்கம் இந்த அணுமின்நிலையம் பலகோடி ரூபாச் செலவில் உருவாக்கப்பட்டது. இதனை ஆரம்பத்திலேயே எதிர்த்திருக்கலாம் ஆனால் தற்போது உதயகுமார் தமிழ்த் தேசியத்தின் பிரதிநிதியாக தமிழர்களின் தலைவராக உருவாவதற்கு முன்னெடுக்கும் ஒரு எத்தனிப்பே இது என்றும், மக்களுக்குப் பீதியை உருவாக்கி அவர்களைத் தவறான வழியில் வழிநடாத்துகிறார் என்ற குற்றச்சாட்டு அதிகமானவர்களால் முன்வைக்கப்படுகிறது. உதயகுமாரோ தன்னை விட்டுவிடுங்கள். உதயகுமார் என்ற தனிநபரை கவனத்தில் கொள்ளாதீர்கள். கூடங்குளம் மக்களுக்குச் சரியான பதிலை அளியுங்கள் என்கிறார்.

தாம் இப்போது இந்தப் பிரச்சனையைத் தொடங்கவில்லை, ரஜீவ் காந்தி ஒப்பந்தம் செய்து தொடங்கிய காலத்தில் இருந்து நாம் பல போராட்டங்களைச் செய்து வருகிறோம். ஒவ்வொரு தடவையும் அரசு தன் பொலீஸ் துணையுடன் இராணுவத் துணையுடன் அவற்றை முறியடித்து வந்தது என்று சொல்லி படங்களுடன் ஆதாரம் காட்டுகிறார். அத்தோடு அணுமின்நிலையத் தயாரிப்பாளர்களும் இந்தியப் பிரதமரும் அப்துல்காலம் போன்ற விஞ்ஞானிகளும் இந்த இடிந்த கரையில் வந்து வாழுகிறோம் எனச் சொன்னால் நாம் இந்தப் போராட்டத்தைக் கைவிடுகிறோம் எனச் சொல்லுகிறார். இந்த அணுமின்நிலையம் பாதுகாப்பானது என்றால் அவர்கள் இங்கு வந்து வாழட்டும். நாமும் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு அவர்களுடன் இருக்கிறோம். எந்தப் பிரச்சனையுமில்லை என்கிறார். இது பாதுகாப்பானது இல்லை என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்கிறார். அதனால் அவர்கள் ஒருபோதும் இங்கு வாழமாட்டார்கள் என்று அறுதியிட்டுக் கூறுகிறார் உதயகுமார். ஆனால் அணுமின்நிலையம் குறித்த உதயகுமாரின் அறிக்கைகளுக்கு அரசிடம் இருந்து இதுவரை எவ்வித உறுதியான பதிலுமில்லை .

போபால் விசவாயுக்கசிவும் ஃபுக்கோசிமா அணுக் கசிவும் நமக்குத் தந்த பாடங்களில் இருந்து நாம் இனியாவது கற்றுக் கொள்ளவேண்டும். ஹிரோசிமா நாஹாசாகி இத்தனை ஆண்டுகளின் பின்னாலும் இன்றும் உலகை உலுக்கிக் கொண்டிருக்கிறது. இந்த அணுமின்நிலையத்தில் பாதிப்பு வந்தால் தனியே கூடங்குளத்தை மட்டும் பாதிக்கப் போவதில்லை. நாடு தாண்டி கண்டம் தாண்டி அழிவுகளை ஏற்படுத்தும். அதனால் ஒட்டுமொத்த மனித சமுதாயமே ஒன்று சேர்ந்து எதிர்க்கவேண்டிய விடயம் இது. இந்தக் கூடங்குளப் போராட்டம் உலகை மாற்றியமைக்கும் ஒரு போராட்டமாக நாம் மாற்றியமைக்க வேண்டும்.



# ஐ,நா, மனித உரிமை ஆணைக்குழுவின் விசேட பிரதி நிதிகள் இலங்கை வருகை,

விஜய்

கடந்த காலத்தில், ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட பரிந்துரைக்கு அமைய ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் இலங்கை வரமுயற்சிகளை மேற்கொண்ட போது தென்னிலங்கையில் எதிர்ப்புக்கள் தோன்றியமையால் அவர்களின் வருகை சாத்தியமற்றுப் போனது. அரசாங்கத் தரப்பினரும், எமது நாட்டின் பிரச்சினையில் எவரும் தலையிடக்கூடாது, எம்மீது போர்க்குற்றச்சாட்டு சுமத்த முயற்சிக்கின்றனர், ஜனாதிபதியை மின்சார நாற்காலிக்கு கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர் எனவும் கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர். ஆயினும் கடந்த வெள்ளிக்கிழமை (14.09.2012) ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் விசேட பிரதி நிதிகள் இருவர் “நிலைமைகளை அறிந்து கொள்வற்காக” இலங்கை வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரகத்தில் ஆசிய பசுபிக், மத்திய கிழக்கு, வடக்கு அபிரிக்க ஆகிய பிராந்தியங்களின் பிரிவின் தலைவரான ஹன்னி மெகல்லியும், உயர்ஸ்தானிகரகத்தில் சட்டத்தின் மாட்சிமை மற்றும் ஜனநாயகம் ஆகிய விடயங்களின் பிரிவினைச் சேர்ந்த ஆஸகர் செல்டருமே இலங்கை வந்துள்ளனர். இவர்களின் வருகையின் நோக்கம் இலங்கையில் மனித உரிமைகள் சூழல் பற்றி மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் நடைமுறைகள் குறித்து தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதிநிதிகளின் விஜயம் குறித்துக் கருத்துத் தெரிவித்த ஐ.நா.சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி பாலித கோஹணவும், “இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் பிரதி நிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர் எனவும் இலங்கை மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானக் கொள்கை தொடர்பாக அரசாங்கத்திற்கு பல்வேறு வழிகளில் ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள் என எதிர்பாரக்கிறோம்” என்றே கருத்துத் தெரிவித்துள்ளார். மேலும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பிரிதிநிதி பிரதிபா மஹாநாமவை பிரிதிநிதிகள் சந்தித்த போது, “இலங்கையின் அழைப்பின் பேரிலேயே தாங்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாகத் தெரிவித்தள்ளதுடன், யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்துவதற்கு நோக்கில் விஜயம் செய்யவில்லை” எனவும் தெரிவித்துள்ளனர்.

பிரதிநிதிகளின் இலங்கை விஜயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பிரதிபா மஹாநாம, ”இலங்கைக்கு எதிராக சில ஆதரமற்ற குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படும் நிலையில் மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை கண்டுள்ள முன்னேற்றங்களை வெளியுலகிற்குத் தெரிவிக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைக்கு இந்த அதிகாரிகள் சேகரித்துப் போகும் தகவல்கள் உதவும்” எனத் தெரிவித்திருக்கிறார். பிரதிநிதிகள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்சவை சந்தித்துள்ளனர். இச்சந்திப்புத் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், மீள்குடியேற்றப்பட்ட மக்கள் புதிய வாழ்க்கையைத் தொடங்க கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதாகவும், வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுவதாகவும் பிரதிநிதிகளிடம் பசில் ராஜபக்ச தெரிவித்தள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் விசேட பிரிதிநிதிகள், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பிரிதிநிதி பிரதிபா மஹாநாமவைச் சந்தித்த போது, பிரதிபா மஹாநாமவிடம் கடத்தல்கள், காணாமல் போதல்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சிலவற்றை உடனடியாக அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை திங்கள் (17.09.2012) வடபகுதிக்கச் சென்ற ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் விசேட பிரதி நிதிகள் யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் விஜயம் செய்து பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

பிரதிநிதிகள் யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்தினை பிரதிநிதிகள் சந்தித்த போது, ஆயர், தமிழ் மக்களுக்கு இன்னமும் அரசியல் தீர்வு வழங்கப்படவில்லை, இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படவில்லை, யுத்த காலங்களில் உயிரிழந்தவர்களின் சமயச்சடங்குள், அஞ்சலிகள் போன்றவற்றை மேற்கொள்ள முடியாமலுள்ளது, மீள் குடியேற்றம் செய்யப்பட்டவர் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை, காணாமல் போனவர்களின் விபரங்கள் வெளியிடப்படவிலலை போன்ற பிரச்சினைகளை பிரதிநிதிகளுக்கு விளக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும், அவர் வட மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பிரதிநிதிகள் யாழிலுள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்களைச் சந்தித்து தகவல்களைப் பெற்றதுடன், மீள்குடியேற்றப்பட்ட மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர். அத்துடன் கிளிநொச்சியில் இறுதிக்கட்டப் போர் நிகழ்ந்த பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை பார்வையடுவார்கள், மீள்குடியமர்த்தப்பட்ட மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

---

*விரிவுரையாளர்கள்...*

பல்கலைக்கழகங்களை விரைவில் திறக்குமாறு கோரி கண்டி நகரில் சத்தியாக் கிரகப் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்.

விரிவுரையாளர்கள் நடாத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. பல்கலைக்கழைப் பரீட்சைகள் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன. பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட முடியாத நிலையும் தோன்றியிருக்கிறது.

விரிவுரையாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தினால், கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைகளின் விடைத்தாள் திருத்தும் பணிகளும் ஆரம்பிக்கப்படவில்லை. பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் வரிவுரையாளர்கள் உதவியின்றி ஆசிரியர்களைக் கொண்டு விடைத்தாள் திருத்தும் பணிகளை மேற்கொள்ள முனைந்த போதும் அது சாத்தியமாகவில்லை என்று தெரவிக்கப்படுகிறது. இந்நிலையில் கல்வியமைச்சர் பந்துல குணவரத்தன, மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடுவதற்கு சமூகமளிக்குமாறு பல்கலைக்கழைக பேராசிரியர்கள் மற்றும் வரிவுரையாளர்களிடம் வேண்டு கோள் விடுத்திருந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கோரிக்கைகளை அரசாங்கம் தீர்த்து வைக்க முயற்சிக்காமல் இருப்பது குறித்து அதிருப்திகள் அதிகரித்து வரும் அதே வேளை, போராட்டத்தினைக் கைவிட்டு பேச்சு வார்த்தைக்கு வருமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

---

# முல்லைத்தீவில் கவன ஈர்ப்புப் போராட்டம்

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கவனயீர்ப்புப் போரட்டங்களை முல்லைத்தீவில் நடாத்தவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் அறிக்கை வெளியிட்டுள்ளன.

த.தே.ம.முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், செயலாளர் கஜேந்திரனும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில், முல்லைத்தீவு மாவட்ட கோப்பாபிலவு கிராம மக்களை சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தக் கோரியும் இலங்கை வந்துள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பிரதிநிதிகளின் கவனத்தை ஈர்க்கும் முகமாக எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு அரச அதிபர் பணிமனை முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடாத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

த.தே.ம.முன்னணியின அறிக்கையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கோப்பாபிலவு கிராம மக்கள் இன்னமும் மீள்குடியமர அனுமதிக்கப்படவில்லை. அக்கிராமம் உள்ளிட்ட 2500 ஏக்கர் நிலத்தில் நிரந்தரமாக இராணுவ தலைமையகம் ஒன்றினை அமைத்துள்ளதுடன் இக்கிராம மக்களை அவர்களது விருப்பங்களுக்கு மாறாக வேறு இடங்களில் குடியேற்றுவதற்கு அரசு வலுக்கட்டாயப் படுத்தி வருவதாகவும் அம்மக்களை சொந்த இடங்களில் மீள் குடியமர்த்த சர்வதேதச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை த.தே.கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் விடுத்துள்ள அறிக்கையில், முல்லைத்தீவு மாவட்ட மக்களின் அடிப்படை உரிமைகளைக கருத்தில் கொண்டும், மீள் குடியேற்றப்படாத மக்களின் மிள் குடியேற்றத்தை வலியுறுத்தியும், நில ஆக்கிரமிப்புக்களை கண்டித்தும், காணாமல் போனோர் மற்றும் சிறையில் இருக்கின்ற தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் முல்லைத்தீவு நகரத்தில் கவனயீர்ப்பு போராட்டத்தை திங்கட்கிழமை (24.09.2012) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தவுள்ளது. இப்போரட்டத்தில் சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சிவஞானம் சிறிதரன் விடுத்துள்ள அறிக்கையில் போர் முடிந்து மூன்றாண்டுகள் ஆகிய நிலையில், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. அகதி முகாம்களில் துன்பங்களுடன் இன்னமும் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இராணுவ வலயங்களுக்குள் மக்கள் சுதந்திரத்தை இழந்த நிலையில் வாழ்கின்ற நிலைமை தொடர்கின்றது, போரால் துன்புற்ற மக்கள் நில ஆக்கிரமிப்பாலும் இராணுவ ஆக்கிரமிப்பாலும் வேதனைப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**உங்கள் சமூக நிகழ்வுகளை பூபாளம் இணையத் தளத்தில் இலவசமாய் விளம்பரப்படுத்துங்கள்!**

*பழைய மாணவர்களின் ஒன்று கூடல்களா?*

*ஊர்ச் சங்கங்களின் ஆண்டு விழாவா?*

*சமுக அமைப்புகளின் கலந்துரையாடலா?*

அந்த நிகழ்வுகள் பற்றிய விபரங்களை boobalam@ymail.com என்ற விலாசத்தில் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அவற்றை நாங்கள் பூபாளம் இணையத் தளத்தில் இலவசமாகப் பிரசுரிப்போம்.

# ஆளை மாற்றும் ஆளி விதை

## (Flax Seed)

சங்கமி



இதன் பூர்வீகம் மத்தியகிழக்கு நாடுகள் என்றும் அங்கிருந்து இந்தியாவிற்கு பரவியது என்றும் சொல்லப்படுகிறது. ஆரம்பத்தில் ஆளிவிதையில் இருந்து எடுக்கப்படும் எண்ணை சாயங்களுக்கு மேல்பூசி உலரவைக்கப்படுவதற்கும், உயர்ரக கடதாசி, லினன் போன்ற துணிவகைகள் உருவாக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டது.

இந்த ஆளிவிதை பற்றி ஊரில் நம்மில் எத்தனை பேருக்கு தெரியும், ஆனால் இங்கு FLAX SEED என்றால் தெரியாதவர்கள் இல்லை என்றே கூறலாம். அந்த அளவிற்கு கடந்த பலவருடங்களாக இதன் தேவை அதிகரித்து விட்டது. அதற்கு காரணம் எமது உணவுப் பழக்கவழக்கமும் அதனால் வரும் நோய்களுமே. சரி இப்போது அதன் பலனையும், பலத்தையும் எப்படி பெறலாம் என்று பார்ப்போம். இது ஏறத்தாழ எள்ளுப்போன்றது ஆனால் எள்ளை விட கொஞ்சம் பெரிதாக இருக்கும்.

ஆளிவிதையில் இரண்டு வகை உண்டு ஒன்று மஞ்சள் நிறத்திலும். மற்றயது மண்ணிற நிறத்திலும் காணப்படும். மஞ்சள் ஆளிவிதையை விட மண்ணிறத்தில் உள்ள ஆளிவிதையில் ஒமேகா-3 இன்அளவு கூடுதலாக காணப்படுகிறது. இதில் மிகப்பெரிய ஊட்டச்சத்தான ஒமேகா-3 (OMEGA-3) என்ற நல்ல கொழுப்பும், அதிகூடிய நார்ச்சத்து, மேலும் வைட்டமின்- A,B,D கல்சியம், மக்னீசியம், புரதம் போன்ற பல சத்துக்கள் கொண்டது.

எப்படி ஒரு பெரிய வசன நடைக்கு முற்றுப்புள்ளி வைப்போமோ அதபோல் பல நோய்களுக்கு இத்தனூாண்டு சைஸில் இருக்கும் இந்த தானியமும் முற்றுப்புள்ளி வைக்கும். இது நோய் வருமுன், வரும்போது, வந்தபின் காப்போர், என முக்கியமாக எல்லா வயதினர்க்கும் உதவும் அரிய தானியம். மாமிசம் உண்ணாதவர்களுக்கு இந்த ஆளிவிதை மிக உன்னதமான உணவு. அதபோல் மாமிசம் உண்பவர்கள் salman, Tuna, Halibut போன்ற மீன் வகைகளில் இருந்து பெறலாம். ஆனாலும் கூட தினமும் அவற்றை உண்ணுவது என்பது சாத்தியமில்லை. அதனால் தேநீருக்கு சுவை சேர்க்க எப்படி சீனி போடுவீர்களோ அதேபோல் இரண்டு சீனி கரண்டியுடன் (Teaspoon) ஆளிவிதை மாவை உள்ளெடுக்க ஆரம்பிக்கலாம்.

இங்கு எல்லா வயதினரும் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை உடற்பருமன், அடுத்து காலை வேளை அவசர உலகில் அடியெடுத்து வைக்கும்போது ஏற்படும் மலச்சிக்கல், சுவையான கொழுப்பு கூடிய உணவுகள் தரும் கெட்ட கொழுப்புகள், (சிலரிற்கு அவர்களது உடலே Bad cholesterol ஐ உருவாக்கும்), மார்பகப்புற்று நோய், PROSTATE CANCER, நீரழிவு நோய், ஞாபகமறதி, உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்றுதல், போன்றவற்றிற்கு உகந்தது.

அன்றாட உணவில் அவரவர் வசதிக்கேற்ப எப்படி இதனை சேர்க்கலாம் என்பதை பார்ப்போம். FLAX SEED ஐ பல வடிவங்களில் வாங்கலாம், அதாவது (FLAX SEED POWDER, OIL, CAPSULES)மா, எண்ணை, மாத்திரை. தானியமாக உட்கொண்டால் அவை குடலினால் அவ்வளவாக உறிஞ்சப்படாமலே வெளியேறிவிடும். எண்ணை, மாத்திரைகளைவிட மாவாக உணவுடன் சேர்த்து உண்டால், குடலினால் பெருமளவு உறிஞ்சப்படும்.

இதற்கு சுலபமான வழி FLAX SEED ஐ கடையில் வாங்கி GRINDER இல் அரைத்து வைத்துக்கொள்ளுங்கள். FLAX SEED எந்தவிதமான சுவையும் இல்லாதது. ஆகவே தினமும் இரண்டு தேக்கரண்டி ஆளிவிதைமாவை தண்ணீரில் கரைத்தோ, அல்லது தயிர் (YOGURT), JUICE அல்லது காலையில் உண்ணும் சீரியல்களில் போட்டு உண்ணலாம். மேலும் புட்டு, தோசை, இடியப்பம், இட்டலி, இப்படியான எமது உணவுவகைகள் சமைக்கும்போது இதனையும் சேர்த்து சமைக்கலாம். அத்துடன் CAKE, MUFFIN போன்றவற்றுடன் கலந்து ஓவன் (OVEN) இல் வைத்தும் சமைத்து சாப்பிடலாம். முக்கியமாக ஆளிமாவை உண்ணும்போது கூடவே நன்றாக தண்ணீர் குடிக்கவேண்டும். இது சமிபாட்டின் வேகத்தை கூட்டும். எந்த விடயமாக இருந்தாலும் தினமும் தொடர்ந்து செய்தால்தான் அதன் பலனை முழுமையாக அனுபவிக்கமுடியும். நாம் மட்டுமல்ல எமது பிள்ளைகளுக்கும் இதன் பயனை எடுத்துகூறி அவர்களையும் ஆரோக்கியமான பிரஜைகளாக வாழவைப்போம்.

“இளைத்தவன் எள்ளு விதைப்பான் கொழுத்தவன் கொள்ளுவிதைப்பான்” இந்த பழமொழியை மாற்றி இளைத்தாலும் கொழுத்தாலும் ஆளியை உண்டு ஆரோக்கியமாக வாழ்வோம்.

---

## தொடரும் போராட்டங்கள்...

பல அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் சிறைக்கைதிகள் மற்றும் காணமல்போனவர்கள் விடுதலை தொடர்பான விடயம் நீண்டு செல்லும் துயரக்கதையாகவே இன்னமும் இருந்து வருகிறது.

முன்னர் நடைபெற்ற நல்லிணக்க ஆணைக்குழு விசாரணையின் போது பாதிக்கப்பட்ட உறவினர்கள் வாக்கு மூலங்களித்திருந்ததுடன் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் வேணடியுமிருந்தனர். ஆணைக்குழுவினரும் பல சிபார்சுகளை முன்வைத்துமிருந்தனர். ஆரசாங்கம் நல்லிணக்க அணைக்குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்தி வருவதாக சர்வதேச சமூகத்திற்குக் கூறிவருகிற போதும் இவ்விடயம் குறித்த முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

பாதிக்கப்பட்ட உறவினர்கள் தொடர்ந்து வேண்டுகோள்கைளயும் ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொண்டும் வருகின்றனர். கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் சாத்வீக வழியிலான போரட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுமிருந்தன. சர்வதேச சமூகத்திடமும் விடயம் குறித்து விளக்கமளிக்கப்பட்டு இவ்விடயத்தில் தலையிட்டு நீதியைப் பெற்றுத்தருமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுமிருந்தது.

இரண்டு மாதங்களுக்க முன்பாக முல்லைத்தீவில் படை அதிகாரிகள், காணமல் போதல் சம்பவங்கள் நடைபெற்று மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் காணமல் போனவர்கள் உயிருடன் இருப்பதற்கான சாத்தியங்கள் இல்லாதிருக்கலாமெனத் தெரிவித்து மரணச்சான்றிதழ் பெற்றுக்கொள்ள நிர்ப்பந்திந்துள்ளதாகவும் வெற்றுக் காகிதங்களில் கையொப்பங்களைப் பெற்றுள்ளதாகவும் த.தே. கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டுத் தெரிவித்திருந்தார்.

முல்லைத்தீவு பகுதியிலுள்ள காணமல் போனவர்கள் மற்றும் சரணடைந்தவர்களின் உறவினர்களை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணை மேற்கொண்டு காணமல் போனவர்களின் விவரங்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் இவ்வாறு தெரிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. நல்லிணக்க ஆணைக்குழுவிடம் காணமல் போனவர்களின் உறவினர்கள் சமர்ப்பித்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு காணமல் போனவர்களின் குடும்ப அங்கத்தவர்களை இனம் கண்டு அவர்களைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்தே வவுனியா ஜோசப் படை முகாமிலிருந்து வந்த படை அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவித்திருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் யுத்த நடவடிக்கைகளில் காணமல் போனவர்கள் என்பதற்கு அப்பால் முள்ளிவாய்க்கால் மற்றும் வலைஞர்மடம் பகுதிகளில் குடும்பத்தவர்கள் முன்பாக பிடிக்கப்பட்டு பஸ்களில் படையினரால் ஏற்றிச் செல்லப்பட்டவர்கள், ஓமந்தையிலும் வவுனியா இடைத்தங்கல் முகாம்களிலும் வடிகட்டிக் கைது செய்யப்பட்டவர்கள் எனப் பலர் பற்றிய தகவல்கள் இல்லாமல் உள்ளன. அவர்களுக்கும் மரணச்சான்றிதழ் வழங்க அரசு முற்படுமானால் முதலில் அவர்கள் எவ்வாறு உயிரிழந்தார்கள் என்பதை சொல்லட்டும் எனச் சவால் விடுத்திருந்தார்.

த.தே.கூட்டமைப்பிற்கும் அரசிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போதும் தடுத்து வைக்கப்பட்டோர் மற்றும் காணமல்போனோர் தொடர்பாகவும் பேசப்பட்டது, அவ்வாறானவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிடுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

மேலாக, கடந்த வெள்ளிக்கிழமை (14.09.2012) கொழும்பு மகஸின் சிறையில் மிகவும் உயிராபத்தான நிலையில் இருக்கும் சதீஸின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அவரை உடனே பிணையில் விடுவிக்குமாறு அவரின் மனைவியும் தந்தையும் அவசரக் கோரிக்கையை விடுத்துள்ளார்கள். தடுத்துவைக்கப்பட்டுள்ள சதீஸ் சிறச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. சிறைகளில் தடுத்து வைக்கப்பட்ட கைதிகளும் தங்களை விடுவிக்கக் கோரி பல போராட்டங்களை மேற்கொண்டு வந்துள்ளனர். அவர்கள் பல தடவைகள் அதிகாரிகளால் தாக்கப்பட்டுமுள்ளனர் என்பதுவும் கவனத்தில கொள்ள வேண்டியுள்ளது.

எல்லா சாத்வீக, சனநாயக வழிகளிலும் முயன்றும் காணமல் போனவர்கள் பற்றிய தகவல்கைள அவர்கள் உறவினர்களால் இன்னமும் பெற்றுக் கொள்ள முடியாமலுள்ளது. தடுத்து வைக்கப்பட்டுள்ள அநேகம் பேர் பற்றிய தகவல்கள் இன்னமும் தெரியாமலுமுள்ளது.

---

### உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள...

## பூபாளத்தின் முற்றவெளி

முகப்புத்தகத்தின் உள்நுழை அடையாளத்துடன் boobalam.com இல் நீங்கள் நுழைந்து உங்கள் கருத்துக்களை சுதந்திரமாய் தெரிவிக்கலாம். முகப்புத்தக அடையாளம் இல்லாதோர் உங்கள் விபரங்களை boobalam@ymail.com என்ற மின்னோலை விலாசத்திற்கு ஓலை அனுப்புங்கள்.

### இந்த வாரம்... முற்றவெளிக்காய் கியூறியஸ் ஜி எழுதிய...

### மந்தைக் கூட்டத்திற்கு முற்றவெளி ஒரு கேடா?

# இசை

## இசைக்கு இது தான் எல்லை!

சிவதாசன்

கலை இலக்கிய விழாக்களில் தங்கள் திறமைகளை அற்புதமாக வெளிப்படுத்தும் கலைஞர்களைக் கண்டு ஒரு காலத்தில் நான் புல்லரித்துப் போவதுண்டு. இப்பொழுது ஒன்றில் இவ்விழாக்களைத் தவிர்த்துக் கொள்வேன் அல்லது புல்லரிக்காது பார்த்துக் கொள்வேன். இப் புல்லரிப்புகளால் நிறைய நொந்து போனவன் நான்.

சில வருடங்களுக்கு முன்னர் நண்பர் வைரமுத்து சொர்ணலிங்கம் அவர்கள் “இசைக்கு ஏது எல்லை” என்றொரு நிகழ்ச்சியை வருடா வருடம் நடாத்தி வந்தார். இசையார்வம் காரணமாகவும் புரவலராயிருப்பதற்கான செல்வந்த ராகவிருந்த காரணத்தாலும் தனது பணத்தில் ஈழத்துக் கலைஞர்களைக் கொண்டு கர்நாடக இசை நிகழ்ச்சிகளை நடாத்தி அவர்களைச் சன்மானங்களோடு கௌரவிப்பது அவரது வழக்கம். நிகழ்ச்சிக்கு மண்டபம் நிறைய மக்கள் வராவிட்டால் இலகுவில் மனம் நொந்து விடுவார். இப்போது அந் நிகழ்ச்சியை அவர் நடத்துவதில்லை.

ஒரு தடவை இப்படியான நிகழ்ச்சியொன்றிற்குப் போயிருந்தேன். நிகழ்ச்சி மிகவும் நன்றாகவிருந்தது. முடிவில் மிகவும் திறமையாக வாசித்திருந்த ஒரு வாத்தியக்கலைஞரைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தேன்.

சில நாட்கள் கழித்து அக்கலைஞரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அவசரமாகச் சந்திக்க வேண்டுமென்று கேட்டிருந்தார். சந்திப்பின்போது ஒரு அவசர காரணமாக ஆயிரத்து ஐநூறு டாலர்கள் கடன் வேண்டுமென்றும் ஒரு மாதத்தில் திருப்பித் தருவதாகவும் கேட்டார். கலைஞர்களுக்கும் பஞ்சத்துக்கும் நெருக்கம் அதிகம் எனக் கருதி உடனடியாகக் கொடுத்து விட்டேன். ஒரு வாரத்தில் ஐநூறு டாலர்களைத் திருப்பித் தந்துவிட்டார். மிகுதி? சுமார் ஏழு ஆண்டுகள் கழிந்து விட்டன. ஆள் தலை மறைவாகிவிட்டார். பிறகுதான் கேள்விப்பட்டேன் அவருக்கு இப் பழக்கம் அத்துபடி என்று.

என் முகத்தில் ஏமாறும் சோணகிரி என்று எழுதி ஒட்டியிருக்கிறதோ என்னவோ இன்னுமொரு கலைஞனைத் தவறுதலாக வாழ்த்திவிட்டேன். அவனும் ஒரு இளம் நடிகன். அவன் நடித்த திரைப்படமொன்றைப் பார்த்தேன். மிக நன்றாக நடித்திருந்தான். முன் பின் யோசிக்காமல் வாழ்த்தி விட்டேன்.

அடுத்த நாளே அவனிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. தான் ஒரு குறும் படமொன்றைத் தயாரிக்க விருப்பதாகவும் கமெரா ஒன்றை வாடகைக்கு எடுக்கவேண்டுமெனவும் ஒரு நாளையிலேயே சூட்டிங் முடிந்துவிடும் ஒரு முன்நூற்று ஐம்பது டாலர்கள் தேவை எனவும் சொன்னான். படம் நாளொரு பொழுதும் பொழுதொரு வண்ணமுமாக முழு நீளத் திரைப்படமாக வளர்ந்து வருவதாகச் சொல்லி மடிக்கணனியில் சில காட்சிகளையும் காட்டி சுமார் ஐயாயிரம் டாலர்கள் வரை கறந்து விட்டான்.

இரண்டு வாரங்களின் பீன்னர் அழைப்பொன்று வந்தது, அவனது சகபாடியிடமிருந்து. தமது மடிக்கணனி களவு போய்விட்டது படமும் தொலைந்துவிட்டது என்று. தலையில் துண்டொன்றைப் போட்டுக்கொண்டு நானும் என்னைத் தொலைத்துக் கொண்டுவிட்டேன். அதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

இதன் பிறகு இந்த ஸ்பொன்சர் வேலைகளுக்கெல்லாம் போவதில்லை. கலை இலக்கியம் இதெல்லாம் ஒரு பொருட்டேயல்ல என்பதுபோல் தன் பாட்டுக்கு இயங்குகிறது. அதன் காவலர்கள் புதிய சோணகிரிகளை இலகுவாகப் பிடித்துக் கொள்கிறார்கள். சமூகமும் தன்பாட்டுக்கு புதிய சோணகிரிகளை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. கலை உள்நாட்டுச் சரக்கா அல்லது வெளிநாட்டுச் சரக்கா என்பது பற்றி சமூகத்துக்கு அக்கறையில்லை. உருசி எங்கிருக்கிறதோ சனம் அங்கு முகாமடித்து விடுகிறது. இறக்குமதி முகாமையாளர்கள் கலையின் பெயரால் தாங்கள் வளர்கிறார்கள்.

இசைக்கு இதுதான் எல்லை என்றவாறு நண்பர் சொர்ணலிங்கம் ஒதுங்கிக் கொண்டது ஏன் என்று இப்போது புரிகிறது!

## உயிர் கொல்லும் ஊடகங்கள்

இன்னும் சில வருடங்களில் பத்திரிகைகளோ, தொலைக்காட்சிகளோ, இணையத் தளங்களோ உயிர் வாழுமென்று நான் நினைக்கவில்லை. ஐயோ பாவம் “பூபாளம்” இப்போது தான் மூன்றாவது இதழை விரிக்கின்றது அதற்குள்... மன்னிக்க வேண்டும் நான் தமிழ் ஊடகங்களைச் சொல்லவில்லை. பத்திரிகைகளும் இதர ஒலி, ஒளி ஊடகங்களும் தங்கள் இருப்புக்கான தார்மீகத்தை இழந்துவிட்டன.

அதிகார இயந்திரங்களின் பொய் புரட்டுக்களுக்கு முலாம் பூசி மக்களிடையே நல்லிணக்கத்துக்குப் பதிலாக போர்களையும் பேரழிவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன. மக்களின் இயல்பான பலவீனங்களுக்குத் தீனி போட்டு உலகெங்கும் குழப்பங்களை ஏற்படுத்தும் காரணிகளாகி விட்டன.

இந்த வாரம் மட்டும் பல நாடுகளிலும் பல உயிரிழப்புகளுக்கு ஊடகங்கள் காரணமாகவிருந்திருக்கின்றன. இஸ்லாமிய மக்களின் மனங்களைப் புண்படுத்தும்படியான விடயங்களை “வேண்டுமென்றே ”பரப்பியது மூலமாக ஊடகங்கள் பல பழிச்சொல்லுக்கு ஆளாகியிருக்கின்றன.

‘Innnocence of Muslims’ என்றொரு திரைப்படத்தை ஒரு அநாமதேயம் தயாரித்து வெளியிட்டது. இஸ்லாமிய மக்களின் இறைதூதரான முகம்மது நபி அவர்களை இழிவுபடுத்துவதாக அமைந்த அத் திரைப்படத்தை YouTube மூலம் வெளியிட்டார்கள். அப் படம் உருவாக்கக் கூடிய தாக்கத்தை உணர்ந்த சிலர் அதை வெளியிடாதிருக்கும்படி You Tube நிர்வாகத்திடம் வேண்டிக் கொண்டார்கள். ஆனால் பத்திரிகைச் சுதந்திரத்தைக் காரணம் காட்டி அந் நிர்வாகம் அவ் வேண்டுகோளை மறுத்து படத்தை வெளியிட்டது. விளைவு உயிரிழப்புகள் உலகெங்கும் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இது நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே பிரான்ஸில் ஒரு இடதுசாரிப் பத்திரிகையொன்று முகம்மது நபியை இழிவுபடுத்தும் கோட்டுச் சித்திரங்களை வெளியிட்டிருக்கிறது. எரிகின்ற நெருப்பில் பலரும் எண்ணை வார்க்கிறார்கள். இச்சித்திரங்களை வெளியிட வேண்டாமென்று பிரஞ்சு அரசு பத்திரிகையைக் கேட்டுக் கொண்டதாம். பத்திரிகைச் சுதந்திரத்தைக் காரணம் காட்டி அரசின் வேண்டுகோள் உதாசீனம் செய்யப்பட்டிருக்கிறது. உலகெங்கும் கலகங்களும் உயிரிழப்புகளும் தொடரந்த வண்ணம் இருக்கின்றன.

அதே வேளை சில நாட்களின் முன்னர் பிரித்தானிய இளவரசர் வில்லியத்தின் துணைவியார் மேலங்கியற்று இருந்த காட்சியைப் படங்களாகப் பிரசுரித்த பத்திரிகைமீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அரச குடும்பத்தினரின் மானம் காப்பாற்றப்பட்டிருக்கிறது. சட்டங்கள் அதிகாரத்தினால் வளைக்கப் பட்டிருக்கின்றன. மானத்தைக் காப்பாற்ற வளைக்கப்பட்ட சட்டத்தை உயிரிழப்பைத் தவிர்ப்பதற்காக வளைக்க அதிகாரங்கள் தயாரில்லை.

மக்களை முட்டாள்களாக நினைத்து செய்திகளைத் திரிவுபடுத்தி ஊடக சுதந்திரம் என்ற முலாமைப் பூசி வியாபாரம் பண்ணி வரும் ஊடகங்களை மக்கள் இனம் கண்டுகொள்ள ஆரம்பித்து விட்டார்கள். சமூக வலையமைப்பின் வருகை அதிகாரத்தை ஊடகங்களிடமிருந்து பிடுங்கி சாதாரண மக்களிடம் கையளித்து வருகிறது. முகநூல் போன்ற சமூக வலையமைப்புகளே இனி புரட்சியாளரின் ஆயுதங்கள். உண்மையைச் சொல்வதற்கு வரிகளே போதும்.

# கதாநாயக தோற்ற மயக்கத்தை முறியடித்த அப்புக்குட்டி



கதாநாயகர்கள் என்றால் நல்ல உயரம், களையான முகம், தேகப்பயிற்சி செய்தது போன்ற உடல்வாகு, நடனம் ஆடத்தெரின்ந்திருக்கவேண்டும் என்ற விதிகளை படிப்படியாக உடைத்தெறிந்து வருகின்றது தமிழ் சினிமா உலகம், அதற்கு நல்லதொரு ஆரம்பமாக தனுஷ் வந்தார், பின் படிப்படியாக தங்கர்பச்சான், கருணாஸ், வடிவேலு, இவர்களுடன் இப்போ மன்னாரு கதாநாயகன் அப்புகுட்டியும் சேர்ந்துவிட்டார். இந்த அப்புக்குட்டி யார்? இவரை பெரிதாக யாருக்கும் தெரியாது, வெண்ணிலா கபடிக்குழு, குள்ளநரிக்கூட்டம், போன்ற திரைப்படங்களில் கதாநாயகனின் குழுவில் இவரும் முக்கிய பாத்திரத்தில் நடித்திருந்தார், மேலும் மலையாள நடிகர் மோகன்லாலின் சினேகவீடு என்ற திரைப்படத்திலும் நடித்துள்ளார், ஆனால் அழகர்சாமியின் குதிரை திரைப்படம் படம் பார்த்தவர்களுக்கு இவரை நன்றாக தெரிந்திருக்கும். (நடிகை சரண்யா மோகனுடன்) நடித்திருந்தார். 2011 இல் இந்த படத்தில் இவருக்கு சிறந்த துணை நடிகருக்கான தேசியவிருதும் கிடைத்தது. இப்போ மன்னாரு படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். இவர் மேலே குறிப்பிட்ட கதாநாயகர்களை விட தோற்றத்தில் மிகவும் குள்ளமானவர், அப்புக்குட்டியின் அடுத்தபடிக்கான வெற்றியை மன்னாரு திரைப்படம்தான் முடிவு செய்யும். ஆனால் இந்த மாற்றங்கள் கதாநாயகிகள் விடயத்தில் எந்தவொரு மாற்றத்தையும் கொண்டுவரவில்லை. அதற்கு நீண்ட காலம் எடுக்கலாம். அண்மைக் காலமாகவே கதாநாயகர்களுக்காக கதை என்ற நிலை மாறி கதைக்கேத்த நாயகனை தெரிவு செய்வது என்ற நிலை தோன்றியிருப்பது ஆரோக்கியமான மாற்றமே. நல்ல திரைக்கதையை வைத்துக்கொண்டு பிரபலமான நடிக நடிகைகளை பணம் கொடுத்து திரைப்படம் எடுக்க திண்டாடும் ஆரம்பக்கட்ட இயக்குனர்களுக்கு இம்மாற்றம் நம்பிக்கையை கொடுக்கும். இதற்காக மாறி வரும் சினிமா உலகத்துக்கு நாமும் ஒரு ஓ போடலாம்.

சங்கமி

# பரவி வரும் புதிய VoIP தொலைபேசிகள்



## இளவழகன்

Alexander Graham Bell தொலைபேசியை கண்டுபிடித்த நாள்முதல் மிக அண்மைக்காலம் வரை, ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக உலக மக்களின் தொலைபேசி சேவைக்கு அடிப்படையாக இருந்து வந்தது Bell இனால் அறிமுகப்படுத்தப்பட்ட "பழைய" தொழில்நுட்பம். இந்த தொழில்நுட்பத்தை POTS (plain old telephone service) அல்லது PSTN (public switched telephone service) சேவை என அழைப்பர்.

இந்த பழைய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஒருவர் தொலைவில் உள்ள மற்றொருவருடன் கதைக்கும்போது அவர்களின் தொலைபேசி இரண்டுக்கும் இடையில் இரண்டு செப்பு இழைகள் (twisted pair) அவைகளின் பாவனைக்கு மட்டுமென ஒதுக்கப்படும். அவர்கள் தொடர்பை துண்டிக்கும்போது இவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இழைகள் மற்றையோரின் பாவனைக்கு பயன்படும். அத்துடன் இங்கு உங்களின் ஒலி பெரும்பாலும் Analog signal வடிவிலேயே இழைகளின் ஊடு செலுத்தப்படும்.

உதாரணமாக கனடாவில் இருந்து ஒருவர் இலங்கைக்கு தொலைபேசி எடுக்கும்போது அந்த சம்பாசணைக்கு பயன்பட மட்டுமென இரண்டு இழைகள் கனடாவில் இருந்து இலங்கை வரை ஒதுக்கப்படும் (dedicated lines). உண்மையில் இது கனடாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள பல நாடுகளின் தொலைதொடர்பு நிறுவன இழைகளை இணைத்தே உருவாக்கப்படும். இவ்வாறு செய்வதை circuit-switched தொழில்நுட்பம் என்பர். இவ்வாறு உங்களுக்கென்றே இழைகளை அமைப்பதாலும், பலநாட்டு நிறுவனங்களின் சேவைகளை பயன்படுத்துவதாலும் இவ்வகை தொலைபேசி கட்டணம் மிக அதிகம்.

ஆனால் இன்று பரவிவரும் புதிய VoIP (voice-over I-P) தொலைபேசிகள் InternetI பயன்படுத்துகின்றன. இந்த தொழில்நுட்பம் பல விடயங்களில் "பழைய" தொலைபேசியில் இருந்து மாறுபடும். இந்த "புதிய" முறை தொலைபேசி இணைப்பில் உங்களுக்கென்று இழைகள் (dedicated line) ஒதுக்கப்படுவது இல்லை. அத்துடன் தொலைபேசியை அழைப்பவரினதும் அழைக்கப்படுபவரினதும் தொலை தொடர்பு நிறுவனங்கள் தவிர்ந்த வேறு எந்த நிறுவனங்களும் சேவை இங்கு பயன்படுத்துவது இல்லை. அதனாலேயே இப்போது தொலைபேசி கட்டணங்கள் மிக குறைவு. Skype போன்ற சேவைகளும் இவ்வகையை சார்ந்ததே.

இந்த புதிய தொழில்நுட்பத்தில் Analog முறையில் உங்களின் ஒலியை உள்வாங்கி, பல்லாயிரம் துண்டம்களாக துண்டாடப்பட்டு (digitized), சிறு கூறுகளாக்கப்பட்டு (IP packets) மறுமுனை செலுத்தப்படும். மறுமுனையில் மீண்டும் இந்த துண்டங்கள் ஒழுங்கில் இணைக்கப்பட்டு Analog ஒலியாக வழங்கப்படும்.

மிக சில இடங்களிலேயே தற்போது 100% VoIP சேவை, அதாவது அழைப்பவரிடம் இருந்து அழைக்கப்படுபவர் வரையான முழு இணைப்பும் VoIP சேவை, பயன்பாட்டில் உள்ளது. அவ்வாறு செயல்பட இரு முனைகளும் புதிய VoIP தொலைபேசிகளை (அல்லது பழைய தொலைபேசியின் சிக்னலை மாற்ற ஒரு மாற்றியை) பயன்படுத்த வேண்டும். உலகம் முழுவதும் அவ்வாறு நவீன மயப்படுத்தப்படவில்லை.

பல இடங்களில் இரு முனைகளிலும் பழைய முறை சேவையையும் இடையில் புதிய VoIP சேவையையும் பயன்படுத்துகின்றனர். அதாவது கனடாவில் இருந்து இலங்கைக்கு தொலைபேசி எடுக்கும் போது கனடாவில் உங்கள் வீட்டில் இருந்து உங்களுக்கு சேவை வழங்கும் நிறுவனம் வரையும் பின் இலங்கையில் அழைக்கப்பட்டவருக்கு சேவை வழக்கும் நிறுவனத்தில் இருந்து அழைக்கப்பட்டவர் வீடு வரை பழைய முறைமை பாவிக்கப்படும். அதேவேளை இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் இடையில் VoIP தொழில்நுட்பம் பாவிக்கப்படும்.

அதுசரி இவற்றில் எது சிறந்தது? இருமுறைமைகளும் நன்மையையும் தீமையையும் கொண்டுள்ளன.

பழைய முறையில் பிரத்தியேக இணைப்பு (dedicated line) பாவிக்கப்படுவதால் ஒலி மிக தெளிவானது ஆனால் சேவைக்கட்டணம் மிக அதிகம். புதிய முறையில் ஒலி பாதிப்படைய பல காரணிகள் உண்டு ஆனால் சேவைக்கட்டணம் மிக குறைவு. போதிய bandwidth இன்மையும் ஒரு காரணமாகலாம். இதனால்தான் சில phone-card களின் ஒலி தெளிவாகவும் சில தெளிவற்றும் காணப்படும்.

இரண்டாவது விடயம் தொலைபேசிக்கான மின் இணைப்பு. பழைய தொலைபேசிகள் தமக்கு வேண்டிய மின்னை தொலைபேசி நிறுவனத்திடம் இருந்தே பெற்றுக்கொள்ளும். உங்கள் வீட்டில் மின் துண்டிக்கப்பட்டாலும் உங்கள் தொலைபேசி இயங்கும். ஆனால் புதிய தொலைபேசிக்கு உங்கள் வீட்டு மின்னே பயன்படுத்தப்படும். அதனால் உங்கள் வீட்டில் மின் இல்லையென்றால் நீங்கள் உங்கள் தொலைபேசியை பாவிக்க இயலாது. சிறு வர்த்தகர்கள் இதை குறிப்பாக கவனிக்க வேண்டும். சிறு வர்த்தகர்கள் ஓரிரு பழைய முறை இணைப்புக்களையும் வைத்திருப்பது பாதுகாப்பு.

மூன்றாவது மறைந்திருக்கும் ஓர் செலவு. பழைய முறையில் இருந்திருக்காத ஒரு செலவு புதிய முறையில் மறைந்துள்ளது. புதிய முறை தொலைபேசியில் நீங்கள் கதைக்கும்போது நீங்கள் மாதாந்தம் ஒதுக்கப்பட்ட உங்கள் Internet இன் சேவையை பயன்படுத்துகிறீர்கள் *(64 kbps ஒவ்வொரு திசையிலும் மொத்தம் 128 kbps).*

நாலாவதாக புதிய சேவையின் மிகப்பெரிய நன்மை இவ்வகை தொலைபேசியை நீங்கள் உலகெங்கும் எடுத்துச் செல்லலாம். அவ்வாறு செல்லும்போது உங்கள் தொலைபேசி இலக்கமும் உங்களுடன் இலவசமாக வரும் (சில நிறுவனங்கள் இதை திருட்டுகள் காரணமாக தடுப்பர்). இதை பழைய தொலைபேசியில் செய்ய முடியாது. சிறு வர்த்தகர்கள் அவர்களின் அலுவலகத்தில் ஒரு தொலைபேசியையும் வீட்டில் அலுவலக இலக்கத்தையே பயன்படுத்தி இன்னுமோர் தொலைபேசியையும் வைத்து 24 மணிநேர சேவையும் செய்யலாம்.

ஐந்தாவதாக அவசரகால அழைப்பை கவனிக்கலாம். பழைய முறை தொலைபேசியை பயன்படுத்தி நீங்கள் அவசரகால அழைப்பை மேற்கொண்டால் அவசரகால சேவை வழங்குவோருக்கு உங்கள் முகவரி உடன் திடமாக தெரியும். ஆனால் புதிய முறையில் உங்கள் முகவரியை நீங்களே கொடுக்கவேண்டிவரலாம். இதற்கான சேவை நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் உங்களின் கவனம் இங்கு முக்கியம்.

ஆறாவதாக, புதிய முறையில் நீங்கள் நினைத்தவுடன் புதியதோர் தொலைபேசியை வாங்கி இணைக்க முடியாது. அவ்வாறு புதிய தொலைபேசியை இணைக்க முன் அவற்றை உங்கள் சேவை நிறுவனத்திடம் பதிவு செய்யவேண்டும். ஆனால் பழைய முறையில் நீங்கள் நினைத்தபடி தொலைபேசிகளை வாங்கி பூட்டலாம்.

இவ்வாறு இரு பாவனைகளிலும் பல நன்மைகளும் தீமைகளும் உண்டு.


உங்கள் நினைவுகளை நிரந்தரமாக்க...

கொடாக் நிறுவனத்தின் நவீன புகைப்பட அச்சு இயந்திரங்களில் உங்கள் புகைப்படப் பிரதிகளை அச்சிட்டுக் கொள்ளுங்கள்.




நூறு வருடங்களுக்கு மேல் பாதுகாக்கப்படக் கூடிய பிரதிகள்!

8 x 10 அளவிலான பிரதிகளை நீங்களே அச்சிட்டுக் கொள்ளலாம்.

உங்கள் படங்களுடன் கூடிய கலண்டர்கள், வாழ்த்துக்கள், அழைப்பிதழ்கள்

உங்கள் கமெராக்களில் உள்ள மெமரி கார்ட்களிலிருந்தும், உங்கள் செல்லிடப் பேசியிலிருந்து Bluetooth மூலமாகவும் படங்களை அச்சிடலாம்.

உங்கள் படங்களிலிருந்தும் நேரடியாக பிரதிகளைப் பெறலாம்.

Palm Print Inc.

1345 Morningside Ave #8

416 284 9545





Life Insurance

In case you can't be there to catch them, make sure you leave a safety net!

Ravi Ponnudurai
Insurance Advisor
647.868.6475

MEGA Financial Group

Phone: 416 293 5559, Fax: 416 293 9409
Address: 28 - 4168 Finch Ave E, Toronto, Ontario M1S 5H6

# வருது வருது! விலகு விலகு! ஐபோன் வெளியே வருது...!



விற்பனைக்கு வந்து 24 மணி நேரத்திற்குள் 2 மில்லியன் ஐபோன் 5 செல்லிடப் பேசிகளை விற்பனை செய்து சாதனை படைத்திருக்கிறது அப்பிள் நிறுவனம். டீன் ஏஜ் பிள்ளைகளும், விலாசம் காட்டும் பெரியோருமாய் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஐபோன் 5 புதிய பிறவி எடுத்து வந்திருக்கிறது. அன்ட்ரோயிட் ரக செல்லிடப் பேசிகள் ஏற்கனவே கொண்டுள்ள விடயங்களையே இப்புதிய ஐபோனும் கொண்டிருந்தாலும், அப்பிள் ரசிகர்களுக்கு இது தேனோடு சேர்ந்த தெள்ளமுதம். மெய் சிலிர்த்துப் போய் இருக்கிறார்கள்.
ஏற்கனவே இருந்த 3.5 அங்குலத் திரை போய் நான்கு அங்குலத் திரை வந்திருக்கிறது. உயர்ந்து மெலிந்த புதிய ஐபோன் வெறும் 7.6 மிமீ தடிப்பானதுடன், 112 கிராம் நிறையை மட்டுமே கொண்டிருக்கிறது. Long Term Evolution எனப்படும் LTE தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தகவல் பரிமாறும் இந்த புதிய ஐபோன், தரவுகளைப் பரிமாறுவதில் செக்கனுக்கு நூறு மெகாபிட் வேகம் கொண்டது.

முன்னைய ஐபோன் 4S மாதிரியைப் போலன்றி, புதிய ஐபோனில் உள்ள CPU இரு மடங்கு வேகம் கொண்டது. இதன் மின்கலம் நீண்ட நேரம் பாவனைக்கு உதவக் கூடியது. எட்டு மணி நேரம் பேசவும் இணையத் தளத்தைப் பார்வையிடவும், பத்து மணி நேரம் வீடியோ பார்க்கவும், 40 மணி நேரம் பாடல்கள் கேட்கவும் 225 மணி நேரம் அழைப்புகளுக்காக காத்திருக்கவும் வல்லது இந்த புதிய ஐபோன்.

இதில் எட்டு மெகாபிக்சல் கமெராவும் உண்டு. இந்தக் கமெரா மூலம் 3264 x 2448 பிக்சல் படங்களை எடுக்க முடியும். மிகவும் குறைந்த ஒளியில் படம் பிடிக்கக் கூடிய வில்லைகளைக் கொண்டது இந்தக் கமெரா.

முன்னைய ஐபோன்கள் போலன்றி, இதனை மற்றக் கருவிகளுடன் இணைப்பதற்கோ, மின்னூட்டுவதற்கோ பயன்படும் இணைகருவி எட்டு முனைகளை மட்டுமே கொண்டது. முன்னைய இணைகருவி அகலமானதாகவும் 30 முனைகளையும் கொண்டிருந்தது.
16 ஜிகாபைட் போன்கள் 199 டொலருக்கும், 32 ஜிகாபைட் போன்கள் 299 டொலருக்கும் 64 கிகாபைட் போன்கள் 399 டொலருக்கும் விற்பனையாகும். இந்த விலைகள் தொலைபேசி நிறுவனங்களுடன் 2 வருடத்திற்கு மாதாந்த ஒப்பந்தம் செய்யும்போதே கிடைக்கும். முன்னைய ஐபோன் 4Sமொடல்கள் 100 டொலருக்கும் ஐபோன் 4 மொடல்கள் இலவசமாகவும் கிடைக்கும்.

செப்டம்பர் 21ம் திகதி அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, ஹொங்கொங், சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளில் புதிய ஐபோன் விற்பனைக்கு வரும். செப்டம்பர் 28ம் திகதி மேலும் நூறு நாடுகளிலும் வருட இறுதியில் நூறு நாடுகளிலும் ஐபோன் 5 அறிமுகமாகும்.

அப்பிள் பெருமை பேசும் பலவேறு புதிய திறன்கள் ஏற்கனவே அன்ட்ரோயிட் ரக போன்களில் வந்து நீண்ட காலமாகி விட்டன. சாம்சுங், மோட்டோரோலா, எல்ஜி போன்ற நிறுவனங்கள் ஐபோன்களை மிஞ்சும் மொடல்களை அடிக்கடி வெளியில் விடுகின்றன.
வெறும் அப்பிள் படத்தைச் சுமந்திருப்பதற்காக இவ்வளவு பணத்தைக் கொட்டியழ வேண்டியதில்லை என்பாரும் உளர்.

உங்களுக்கு அதைப் பற்றியெல்லாம் எதற்கு வீண் கவலை?
பெட்டி, படுக்கைகளுடன் தயாராகுங்கள். அந்தக் காலத்து எம்.ஜி.ஆர், சிவாஜி ரசிகர்கள் போல, முதல் நாள் இரவே கடை முன்னால் முகாம் அமையுங்கள். கிடைத்ததும் உற்றார், உறவினர்களுக்கு மட்டுமன்றி, முடிந்தால் 24 மணி நேர வானொலிகளுக்கும் ஐபோனில் அழைத்து விலாசம் காட்ட வேண்டியது தான்.

# வருகிறது புதிய Hi Defnition டி.வி




உங்கள் வீட்டுக்கு வருவோர் போவோர் எல்லாம் பொறாமைப்படும்படியாக சுவரளவு சைஸில் தொலைக்காட்சிப் பெட்டியை வைத்துப் பெருமைப்படுகிறீர்களா? உங்கள் பெருமிதத்தில் மண் அள்ளிப் போட வருகிறது அதிநவீன தொலைக்காட்சி. பாறாங்கல் சைஸில் இருந்த பழைய தொலைக்காட்சிகளை வீசி விட்டு, பலகை சைஸில் இருக்கும் தொலைக்காட்சியை வாங்கி விலாசம் காட்டப் போய் பட்ட கடன் அடைப்பதற்கு முன்னாலேயே வந்து தொலைத்திருக்கிறது இந்த நவீன தொலைக்காட்சி. High Definition TV எனப்படும் தற்போதைய தொலைக்காட்சிகள், பழைய பெட்டித் தொலைக்காட்சிகள் போலன்றி மிகவும் துல்லியமான படங்களைத் தரக் கூடியன. 720, 1080 பிக்சல் அளவுகளில் படங்களைத் தந்த இந்தத் தொலைக்காட்சிகளில் புளூறே தட்டுகளில் வந்த கதாநாயகர்கள் சாகசம் புரிய, கனவுக்கன்னிகள் நித்திரையைத் தொலைக்க... நேரடியாகப் பார்த்த அனுபவப் பரவசம்.

Ultra High Definition TV எனப்படும் புதிய தொலைக்காட்சிகள் தற்போதைய தொலைக்காட்சிகளின் துல்லியத்தை விழுங்கி ஏப்பம் விடக் கூடியன.

கேபிள் இணைப்பு மூலம் நீங்கள் பெறும் தொலைக்காட்சிப் படங்கள் 720 பிக்சல் நீளமும் 480 பிக்சல் அகலமும் உள்ளவை. அதற்கு அடுத்ததாய், 720P எனப்படும் படங்கள் 1280 பிக்சல் நீளமும் 720 பிக்சல் அகலும் கொண்டவை. அதையும் விடச் சிறந்த 1080 i/ 1080 P வகையின 1920 பிக்சல் நீளமும் 1080 பிக்சல் அகலமும் கொண்டவை.

ஆனால் தற்போது வரப் போகும் Ultra High Definition TVவகையின இவற்றுக்கெல்லாம் அப்பனானவை.

இவற்றின் படங்களின் அளவு 4K, 8K என இரண்டு வகைப்படுவன. இதில் முதலாவது 3840 பிக்சல் நீளமும் 2160 பிக்சல் அகலமும் கொண்டன. இவை தற்போதைய HDTVகளை விட நான்கு மடங்கு துல்லியமானவை. அடுத்த வகையின 7680 பிக்சல் நீளமும் 4320 பிக்சல் அகலமும் கொண்டன. இவை தற்போதைய HDTVகளை விட பதினாறு மடங்கு துல்லியமானவை.

இந்தத் தொலைக்காட்சிகளின் முதல் மொடல்களை கொரிய நிறுவனம் எல்ஜி உற்பத்தி செய்ய உள்ளது. 84 அங்குலத் திரை கொண்ட புதிய தொலைக்காட்சியை எல்ஜி அறிமுகப்படுத்த உள்ளது.

விலை? 22 ஆயிரம் டொலர்கள்.

அம்மாடியோவ் என்று அலறாதீர்கள். 42 அங்குல பிளாஸ்மா தொலைக்காட்சிகள் ஆரம்பத்தில் வட அமெரிக்காவில் 40 ஆயிரம் டொலர்களுக்கு விற்பனையாகின. இப்போது அவற்றை 500 டொலர்களுக்குள் பெறலாம்.

சோனி, ரொஷிபா நிறுவனங்களும் தற்போது களத்தில் குதிக்க உள்ளன.

இருந்தாலும், உடனடியாகவே இந்தத் தொலைக்காட்சிகள் வீட்டுக்கு வீடு வரப் போவதில்லை. காரணம் அவற்றிற்கான நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்வதற்கும், ஒளிபரப்புவதற்கும் இன்னமும் ஸ்டூடியோக்களும், கேபிள் நிறுவனங்களும் தயாராக இல்லை. இந்த விலை கொடுத்து இவற்றை வாங்கினாலும், துல்லியம் குறைந்த தற்போதைய படங்களை மட்டுமே பார்க்க முடியும்.

அதையும் விட, வீட்டுக்கு வைப்பதற்கு தொலைக்காட்சி வாங்கிய நீங்கள் இந்த 84 அங்குலத் தொலைக்காட்சியை வைப்பதற்கு பெரிய வீட்டை வாங்க நேரிடும். காரணம் இந்தத் தொலைக்காட்சியில் படம் பார்க்க நீங்கள் குறைந்தது இருபது அடி தொலைவில் இருக்க வேண்டி நேரிடும்.

எதற்கும் உங்கள் பக்கத்து வீட்டுக்காரரர் முதலில் வாங்கி வயிற்றெரிச்சனைக் கிளப்பாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு 22 ஆயிரம் டொலர்கள் என்ன பெரிய காசா? ஒரு பிறந்த நாள் கொண்டாட்டம் நடத்தும் மண்டபக் காசு தானே?

# அறிமுக அட்டைகளில் QR Code

QR Code எனப்படும் Quick Response தற்போது எங்கும் காணப்படுகிறது. வெள்ளைப் பின்புலத்தில் கறுப்புச் சதுரம் ஒன்றில் உள்ள புள்ளிகள் இன்று விளம்பரங்கள் எங்கும் பயன்படுத்தப்படுகின்றன. விற்பனை நிலையங்களிலும் விற்கப்படும் பொருட்களிலும் பயன்படுத்தப்படும் Barcode கள் போல இவையும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த QR Code களை முதலில் ஜப்பானில் ரொயோட்டா நிறுவனம் தனது வாகன உற்பத்தித் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் வாகனங்கள் பற்றிய விடயங்களை பதிவு செய்து உடனுக்குடன் அறிந்து கொள்ள பயன்படுத்த ஆரம்பித்தது. Barcode கள் கையில் வைத்திருக்கும் லேசர் கருவியினால் வாசிக்கப்படுவது போல, இந்த QR Code கள் டிஜிட்டல் கமெராக்களில் உள்ள உணர்திறன் கருவிகளால் வாசிக்கப்படக் கூடியன. QR Code கள் மூலம் Barcode களை விட அதிகளவு தகவல்களைச் சேமிக்க முடியும்.
இந்தத் தகவல்களை செல்லிடப்பேசிகளில் உள்ள கமெரா மூலம் படம் பிடித்து, அவற்றில் உள்ள பொருத்தமான குறுஞ்செயலிகள் (Apps) மூலம் வாசிக்க முடியும்.
இந்தக் குறுஞ் செயலிகள் இந்தப் படத்தின் மூன்று மூலைகளில் உள்ள சதுரங்களை அடையாளம் கண்டு, சரியான பக்கத்தை அறிந்து கொண்டு அதில் சேமிக்கப்பட்ட விடயங்களை வாசிக்கின்றன.




இந்த QR Code களில் உங்கள் உங்கள் தொழில் பற்றிய மேலதிக விபரங்கள், அவற்றைப் பெறக் கூடிய உங்கள் இணையத் தள விலாசம், உங்கள் விலாசத்தை வந்தடையக் கூடிய படங்கள், தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றை இணைப்பதன் மூலம் உங்கள் வியாபாரம், தொழில் பற்றிய விபரங்களை மற்றவர்களுக்கு அறியத் தரலாம்.

உங்கள் அறிமுக அட்டைகள் (Business Cards), பிரசுரங்கள் (Flyers) என்பவற்றில் இவற்றை இணைப்பதன் மூலம் உங்களுடன் தொடர்பு கொள்ள விரும்புவோர் தங்கள் செல்லிடப் பேசி மூலமாக இலகுவாகத் தொடர்பு கொள்ள முடியும்.

QR Code களை உங்கள் அறிமுக அட்டைகளிலும் பிரசுரங்களிலும் மலிவு விலையில் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

**Palm Print Inc.**
1345 Morningside Ave #8,
Scarborough
416 284 9545

# வன்முறை தான் வழியா?




ஸ்ரீரஞ்சினி

வன்முறை என்பது, அதிகாரம் அல்லது உடற்பலத்தைப் பயன்படுத்தி ஒருவரை அல்லது அவர் சார்ந்த குழுவைத் துன்புறுத்துதல் அல்லது பொருள்களைச் சேதப்படுத்துவதன் மூலம் குறித்தவரை அல்லது குறித்த குழுவைப் பயப்படுத்துதல் ஆகும்.

முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு வன்முறையே சிறந்த வழி எனப் பலர் கருதுகின்றனர். அதற்கு, அவர்கள் வளர்ந்த முறையும், வாழ்ந்த சூழலும் முக்கிய காரணமாகின்றன.

“அடி வாங்கி வளர்ந்ததால் தான், நான் இன்று ஓர் உயர்நிலையில் இருக்கிறேன். தழும்பு வந்தால் பெற்றோர்களிலும், ஆசிரியர்களிலும் ஒரு மரியாதையையும் பயமும் தானாகவே வந்துவிடும்!”– எமது சமுதாயத்தில் பெரியமனிதர் என மதிக்கப்படும் ஒருவர், இங்கு நிகழ்ந்த நடன அரங்கேற்றமொன்றில் சொன்ன வசனங்கள் இவை. இவ்வகையான நம்பிக்கைகளும் வன்முறைக்கு வித்திடுகின்றன.

அத்துடன் எமது இளம் சந்ததியினரில் சிலர் வன்முறைக்கு அடிமையாவதற்கு, துரதிட்டவசமாக எமதுநாட்டின் அரசியல் வரலாறும் ஒரு காரணமாக அமைகிறது.

Spare the rod and spoil the child என்றும், அடியாத மாடு படியாது என்றும், அடியைப் போல் அண்ணன் தம்பி உதவான் என்றும் நம்பி, ஒழுங்காட்சி முறையாக, பிரச்சனையைத் தீர்க்கும் ஒரு வழியாக உடல் துன்புறுத்தலைத்தான் பலர் இன, மத பேதமின்றி காலகாலமாகக் கையாண்டு வருகின்றார்கள்.

“உன்னைத் திருத்துவதற்காகத்தான் அடித்தேன், அது உன் மேல் உள்ள கரிசனையால் தான்”, எனச் சொல்லிச் சொல்லி தண்டனை வாங்குபவரின் மனம் அதை அப்படியே நம்புமாறு வைத்துவிடுகிறார்கள் பலர். அவ்வாறு நம்புபவர்களில் அனேகமானோர் தாங்கள் அதிகாரத்துக்கு வரும் போது அதைத் தான் தாமும் செய்கிறார்கள்.

உண்மையில் அடிக்கும் போது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், ஏதாவது ஒருவிதத்தில் தொந்தரவு தருபவர்களிடமிருந்து தப்புவதற்கும் வன்முறை தான் வழி என்றும் கோபம் வந்தால் அடிக்கலாம் என்றும் தான் பிள்ளைகளுக்கு நாம் கற்பிக்கின்றோம். பின்னர் பிள்ளைகள், எமது முன்மாதிரியைப் பார்த்து அதே நடத்தையை மற்றவர்களில் காட்டுகிறார்கள்.

பிள்ளைகளின் ஒழுங்காட்சி என்பது, எது ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நடத்தை, எது ஏற்றுக் கொள்ளப்படமுடியாத நடத்தை என்பதைப் பிள்ளைக்குக் கற்பிப்பதாகும். அடியின் வேதனையில், அதனால் ஏற்பட்ட பயத்தில் அல்லது கோபத்தில் பிள்ளை இருக்கும் போது, பிள்ளை செய்த விடயம் ஏன் பிழையென்றோ அல்லது அதை எப்படிச் சரியாகச் செய்யலாம் எனறோ பிள்ளைக்கு விளங்கப்படுத்த முடியாது. எனவே பிள்ளை கற்றுக் கொள்ளப்போவதொல்லாம் அடி வாங்காமலிருக்க வழி தேடுவது தான்.

அதாவது அடுத்த முறை குறிப்பிட்ட அந்த விடயத்தை பெற்றோருக்கு தெரியாமல் எப்படிச் செய்யலாம் என்பதில்தான் பிள்ளையின் சிந்தனை செல்லும்.

உதாரணத்துக்கு தண்டனைக்குப் பயந்து, பிழை செய்யாமல் இருக்கப் பழகிய நம் தலைமுறையினரும், சரி பிழைகளை அறிந்து பிழை செய்யாமலிருக்கும் நம் இளைய தலைமுறையினரும் strawberry picking செய்வதை அவதானித்தால், நம் தலைமுறை அக்கம் பக்கம் பார்த்து பழங்களை வாய்க்குள் போடுவதையும் “don’t eat them, look at the sign” என்று நம் இளைய தலைமுறை நம் தலைமுறைக்குச் சொல்வதையும் கவனிக்கலாம்.

அத்துடன் சில பிள்ளைகளுக்கு தாம் நினைத்த விடயத்தைச் செய்து முடிப்பதற்கு, சிலவேளைகளில் அடிவாங்குவது, மற்ற விதமான ஒழுங்காட்சி முறைகளை விட சுலபமான வழியாக கூடத் தோன்றலாம். அப்படி ஒரு நிலை வந்தால் அந்த அடி எந்தவித பயனையும் கொடுக்கமாட்டாது.

தண்டனை கொடுப்பதை ஒழுங்காட்சிப்படுத்தலின் வழக்கமாகக் கொண்ட பெற்றோர்களுக்கு வளர்ந்த பிள்ளைகளை ஒழுங்காட்சிப்படுத்துவது மிகப்பெரிய பிரச்சனையாக மாறிவிடும்.

அடிப்பதால் பின்வரும் விளைவுகளை ஏற்படுகின்றன என ஆய்வுகள் கூறுகின்றன.

பிள்ளைகளின் சுயமதிப்புக் குறையும்.

சொன்னால் அடி விழுலாம் என்ற மனப்பயத்தால் பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் இடையிலான எண்ணப்பரிமாற்றம் தடைப்படும்.

பிள்ளைகளின் கீழ்படியும் அல்லது இசைந்து போகும் தன்மை குறையும்.

பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் திறனை, காரணகாரியங்களை ஆராயும் மனப்பான்மையை பிள்ளைகள் இழக்கின்றனர்.

பிள்ளைகள் ஆக்கிரமிப்பாளர்களாக மாறும் சாத்தியக்கூறு அதிகரிக்கிறது.

தனது வலி தான் பெரிதாகத் தெரியுமாதலால், தனது நடத்தையால் மற்றவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை பிள்ளை விளங்கிக்கொள்ளமாட்டாது. அதனால் தனது நடத்தை பற்றி வருத்தப்படவோ, தனது நடத்தையால் பாதிக்கப்பட்டவர்களில் மீது அனுதாபப்படவோ மாட்டாது.

தனது நடத்தைக்கு தான் பொறுப்பேற்க பிள்ளைக்கு வாய்ப்பில்லாமல் போகிறது.

பெற்றோர்களில் கோபமும் பயமும் ஏற்படுவதால் பாசப்பிணைப்பு குறையும்.

மிகுந்த பலாத்காரத்தை அனுபவிக்கும் பிள்ளைகளில் பின்வரும் அறிகுறிகளைப் பார்க்கலாம் என ஆய்வுகள் சொல்கின்றன.

அளவுக்கதிக கோபம் அல்லது பயம்.

பொருள்களை உடைத்தல் அல்லது நாசம் செய்தல்.

தனிமை விரும்பல்.

சுயமதிப்புக் குறைவு.

எதையும் எதிர்மறையாகப் பார்க்கும் இயல்பு.

மன அழுத்தம்.

ஏனைய பிள்ளைகளைத் துன்புறுத்தும் தன்மை.

தற்கொலை செய்யும் முனைப்பு.

குடிக்கு அல்லது போதைக்கு அடிமையாதல்.


கொலை களவு கற்பழிப்பு.

எனவே வன்முறையை இல்லாது ஒழிக்க, பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே பாதுகாப்பான, அன்பான உறைவை வளர்த்தெடுத்தல், பாலின சமத்துவம் பற்றிய விழிப்புணர்வு, அற்ககோல், போதைப் பொருள் போன்றவற்றின் பாதிப்புக்கள் பற்றிய அறிவு என்பன மிக அவசியம் ஆகும்.

உசாத்துணை:http://www.extension.umn.edu/distribution/familydevelopment

# ஆறில்லாக் குடாநாட்டின் நீர்வளம் பெருக்கப்பட வேண்டும்

சின்னையா மாசில்லாமணி




1950ம் ஆண்டுக்குப் பின், துலாவையும் பட்டையையும் எம் மக்கள் மறந்தனர். அவற்றை மறக்க வைத்த நீர் பம்பிகள் ஆண்டுதோறும் நிலத்திற்கு அடியில் செல்லும் நீரைவிட அதிகம் நீரை இழுத்தன. விளைவு, கடல் நீர் உட்புகுந்து அங்குள்ள ஆயிரக்கணக்கான கிணறுகளின் நீர் உவரானது. போரினால் பயிர் உற்பத்திக்கு ஏற்பட்ட தடங்கல் காரணமாக தற்காலிகமாக நிலத்தின் அடியில் இருந்து இழுக்கும் நீரின் அளவு குறைந்திருந்தது. இப்போ தென்படும் சூழலில் பழையபடியும் அதிகம் நீரை வெளியே இழுக்கும் நிலை உருவாகுகின்றது. நிலத்தடி நீர்த்தேக்க வளம் குன்றாதிருக்க அங்கிருக்கும் ஆயிரம் வரையான குளம் குட்டைகளை தூர்ந்து போக விடாது பராமரித்து நிலத்தின் அடிக்குச் செல்லும் நீரின் அளவைக் கூட்டுகிறார்கள். அந்த நடவடிக்கை நிலையைச் சமாளிக்கப் போதாது. வேறு வழிகள் தேடவேண்டும்.

1954ல் ஆறுமுகம் என்னும் ஒரு நாட்டுப் பற்றாளர், குடா நாட்டிற்கு வெளியே கிளிநொச்சி, மாங்குளம், அக்கராயன் ஆற்றுப் பள்ளம் உள்ளடக்கிய 350 சதுரமைலுக்கு அதிகமான பரப்பளவில் பொழியும் மழையின் நீர் கடலுள் விரயமாவதை அவதானித்து அந்நீரைப் பயன்படுத்தி குடாநாட்டின் நிலத்தடி நீர்த்தேக்கத்தின் வளம் பெருக ஓர் செயற் திட்டம் வகுத்தார். அது ஆறுமுகம் செயற் திட்டம் என்ற பெயரில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பிரபல்யம் பெற்றது. குடாநாட்டினுள் 40 சதுர மைல் வரையான பகுதியை உள்ளடக்கிய வடமராட்சி, உப்பாறு ஆகிய உவர்நீர் ஏரிகளையும் 40 சதுரமைல் பரப்பளவு கொண்ட ஆனையிறவு உவர் ஏரியையும் கவனத்தில் கொண்டே இத்திட்டம் வகுக்கப் பட்டது. அணைகள் மூலம் கடலிலிருந்து அவற்றைப் பிரித்து, இவ்வேரிகள் ஊடாகக் கடலுள் விரயமாகும் மழைநீரைத் தேக்கி நன்னீர் ஏரிகளாக அவற்றை மாற்றுவதுதான் அத்திட்டம். அதை நடைமுறைப்படுத்த தொடக்கப் பணிகள் தொடங்கின. பல காரணங்களினாலும் அணை உடைப்புக்களாலும் அத்திட்டம் இன்னும் முற்றுப் பெறவில்லை. இத்திட்டம் முற்றுப்பெற்றால் அங்கு மழையை மட்டும் நம்பி மானாவாரியாக சாகுபடி செய்யப்படும் வயல்களில் கணிசமானவை உவர்தன்மை குறைந்து கூடிய விளைச்சலைத் தருபவையாக மாறும். உவர் நீராக மாறிய பல கிணறுகள் தோட்டச் செய்கைக்கு உகந்த கிணறுகளாக மாறும். உவர்த் தன்மை காரணமாக கைவிடப்பட்டுள்ள பல காணிகள் பயன் தருபவையாக மாறும். மானவாரியாகப்

11ம் பக்கம்,,,

# உண்மையை சொல்ல மறக்கின்றார்களா? மறுக்கின்றார்களா?

வறுமையின் நிறம் சிவப்பு என்று தான் சொல்வார்கள்! ஆனால் பச்சை பசேலென கிடக்கும் என் தேசத்தில் இப்படியும் வறுமையா? எல்லாம் சூனியமயமாகவே தென்படுகின்றது. என்னை துயரத்தில் ஆழ்த்திய முதல் நிகழ்வு பலர் மதம் மாறியிருந்தார்கள். 'உங்கள் மனதில் ஒரு பெரிய குழப்பம் உண்டு, இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக' என ஒருவர் என்னை ஆசீர்வதித்தார். சிறுமியாயிருந்தபோது சாஸ்திரக்காரி ஒருத்தி என்னைப்பார்த்து 'தங்கச்சிக்கு தண்ணீயில ஒரு கண்டம் அதற்கு பரிகாரம் செய்யவேண்டும்' என்றாள். பல வருடங்களுக்கு பின்பும் இது எனக்கு நினைவில் வந்தது. ஏனோ புரியவில்லை. வறுமை மனிதர்களின் வாழ்வில் நிறையவே மாற்றங்களை ஏற்படுத்தியிருந்து.

எல்லாத் துயரங்களையும் சகித்துக் கொண்டு வாழ கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அனேகமாக எல்லா வீடுகள் முன்னாலும் ஒரு மோட்டார் சைக்கிளோ ஆட்டோவோ நிற்கும். அடுப்பில் சமையலிருக்காது. செல்போனிருக்கும். தேனீருக்கு சீனியிருக்காது விலைவாசிகளின் உயர்வு கனத்த இதயங்களின் புலம்பல்

வறுமை வெறுமை. எதிர்பார்ப்புக்கள் நிறையவே உண்டு. ஒவ்வொரு நாளும் எத்தனையோ இல்லங்களில் மின்சாரம் துண்டிக்கப்படுகின்றது, பணம் கட்டாமையினால். எத்தனையோ பிள்ளைகள் மாலையில் சீருடைகளை துவைத்து அதிகாலையில் உலர மறுத்த சீருடைகளை ஈரத்தோடு அயன் பண்ணுகின்றார்கள். தேய்ந்து போன பாதணிகளும் நொந்துபோன பாடசாளை பைகளும்... சுடும் பாதைகளில் பாதணிகளற்று வேகமாய் நடக்கும் பள்ளீ சிறார்களைக் கண்டேன். பள்ளிக்கூட கட்டணம் செலுத்த படாமையினால் வகுப்புக்கு வெளியே சில மாணவர்கள் நிறுத்தப்பட்டிருந்தார்கள். பத்தாம் வகுப்பு சித்தியடைந்த எத்தனையோ மாணவர்கள் புடவைக்கடைகளில் தொழில் புரிகிறார்கள். சாதாரண குடும்பங்களின் வாழ்க்கை முறை மாறிக்கொண்டே வருகின்றது.

ஆனால் வருமானம், கேள்விக்குறியாகவே தென்படுகின்றது. அனேகமான பெற்றோர்களுக்கு தங்கள் பிள்ளைகள் இன்டர்நெஷனல் ஸ்கூலில் தான் படிக்க வேண்டுமென்ற ஆசை, எத்தனையோ சிறப்பான பள்ளிக்கூடங்களிருந்தும். இந்த அம்மாக்களின் ஆசையினால் பாலைவனத்திலுள்ள அப்பாக்களின் வாழ்க்கை புழுதியோடும் தனிமையோடும். சிந்துபாத் கதையைப் போல் தொடர்கிறது.

உண்மையில் வறுமையில் தவிக்கும் குடும்பங்கள் ஆயிரமாயிரம். வாழ்க்கை செலவுகளை பட்டியல் போட்டு வாழத்தெரியாத குடும்பங்களும் வறுமைக்குள் சென்று கொண்டிருக்கின்றன. உண்ண உணவு உண்டோ இல்லையோ வீட்டுக்கு வீடு ஆளுக்கொரு செல்போன் சண்டைபோடுவதும் சந்தோஷமாய் பேசுவதும் மிஸ் கோல் வைப்பதும் அன்றாட வாழ்வின் அங்கமாகிவிட்டது. இது ஒரு புறம்.

உறவுகள் தவித்திட விடுவோமா? பொன்.சுந்தரலிங்கத்தின் அந்த பாடல் எனக்கு உயிர். எத்தனையோ வீதிகளீல் கையேந்தும் பிச்சைக்காரர்கள். அனாதைவிடுதிகள். அகதிமுகாம்கள். பெற்றோர்களால் கைவிடப்பட்ட பிள்ளைகள். பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்கள். யுத்தத்தில் அங்கங்களை இழந்த எண்ணிலடங்கா இளையவர்கள், வீட்டுக்கு வீடு. எல்லாவற்றிற்கும் மேலாக சிறைகளில் வாடும் இளையவர்கள்

தனது வறுமையை சொல்லி புலம்பிக் கொண்டிருந்தாள் வீட்டுக்கு வந்த கூலி வேலை செய்யும் பெண். எங்கிருந்தோ போன் சத்தம் வருகின்றது. ஆனால் எங்கிருந்து வருகின்றது எனதான் தெரியவில்லை ரவிக்கைக்குள்ளிருந்த போனை எடுத்து பேசினார். செல்போன் மோகம் தலைவிரித்தாடுகின்றது. அரசாங்க பேருந்துகளிருந்தும் ஆட்டோவில் பயணிக்கும் ஆண்ட்டிமார்கள் அதிகம். எவ்வளவோ வேலை வாய்ப்புக்களிருந்தும் வெளிநாட்டுக்கு செனறுதான் எங்கள் வாழ்வு விடியுமென காத்திருப்பவர்கள் பலர். வறுமைக்கு தாங்களகாகவே வலை விரித்துக்கொள்கின்றார்கள்.

வீதிகளில் இன்னும் பிச்சைக்காரர்கள் கந்தல் உடைகளோடு பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எத்தனை எத்தனை முகாம்கள்? பெற்றோர்களால் கைவிடப்பட்ட பிள்ளைகள் பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்கள். யாருமற்ற அனாதைகள் நோயாளிகள்.

கொழும்பில் பமுணுவ என்ற இடத்தில் அமைந்துள்ள ஒரு அனாதைவிடுதி சென்றுவந்தால் கண்ணீருடன் தான் வருவீர்கள். பிள்ளைகளை தொலைத்த தாய்மார்கள். தாய்மார்களை தொலைத்த பிள்ளைகள். கொடி பிடித்து ஆர்ப்பாட்டம் செய்ய வர நான் தயாரல்ல . யுத்தம் என் தேசத்தை வறுமைக்குள் தள்ளியதை யாராலும் மறுக்க முடியாது. இனியொரு யுத்தம் வேண்டாம். வேதனயை தனதாக்கிக் கொண்டு தன் பிள்ளைகளை இன்னும் சிறைகளில் தேடித்திரியும் தாய்மார்களுக்கு கருணை காட்டுமா இந்த புண்ணிய புத்ததேசம்?

சுதந்திரமாக எங்கும் போய்வரலாம் ஆனால் வறுமை எங்கு பார்த்தாலும் பச்சைபசேலெனத் தான் காட்சியளிக்கின்றது.

தெய்வங்கள் சில மனிதஉருவத்திலும் நடமாடும் என்பார்கள். எத்தனையோ பிரச்சனைகளுக்கும் மத்தியிலும் இங்கிருக்கும் சில நல்ல இதயம் படைத்த மனிதர்கள் எவ்வளவோ உதவிகளை செய்து வருகின்றார்கள். நூற்றுக்கணக்கான மாணவர்களின் கல்விக்கு விடியலை கொடுத்திருக்கின்றார் ஒரு நண்பர். தனிப்பட்ட முறையில் நிறைய உதவிகளை செய்து வருகின்றார்கள். இவர்களை கோடீஸ்வரர்களாகவே இறைவன் வாழ வைக்கவேண்டும். தாம்ம் தலை காக்கும்.

இவையெல்லாம் மனசால வர வேண்டுமையா!

ஒவ்வொரு தனி மனிதரும் சிறு சிறு உதவிகளை செய்வோமானால் ஓர் உயிரை காக்கும் புண்ணியம் உங்களை சேரும். நான் பாவித்த நல்ல ஆடைகளை சேர்த்து அடிக்கடி அனுப்புவதுண்டு. நண்பிகளிடம் கேட்பேன் உங்களிடம் பாவிக்கப்படாத ஆடைகளிருந்தால் தாருங்கள் என. ஒரு நண்பி நிறைய ஆடைகள் தந்தாள். பிரித்துப் பார்த்தபோது அவள் கனடா வந்த நாள் முதல் வாங்கிய குளிர்கால ஜாக்கெட்டுகள். சிலர் கிழிந்து போன உள்ளாடைகளைக் கூட தந்திருந்தார்கள். சிலர் தருகிறேன் தருகிறேன் என தராமலேயே போனார்கள். இவர்களும் ஒரு வகையான தெய்வங்கள் தான்.
ஒரு சிலர் ஐயோ நாங்கள் சல்வேஷன் ஆமிக்கு குடுக்கிற நாங்கள் என்றனர்

ஊர்வலங்களும் உரத்த கோஷங்களும் உயிர்களைக் காப்பாற்றாது. நீங்கள் செய்யும் சின்ன உதவிகளிலும் உயிர்கள் அங்கே வாழும்.

நான் என்ன பெருசாய் செய்துவிட்டேன் என் தேசத்திற்கு?

எம்.ஜி.யார் சில நாடுகளைச் சுற்றி நடித்துவிட்டு உலகம் சுற்றிய வாலிபன் என படத்திற்கு பெயர் சூட்டினாராம், முழு உலகையும் சுற்றியது போல் என பல வருடங்களுக்கு முன்பு கியுறியசின் கட்டுரையில் வாசித்த நினைவு. இதைப்போல் சொந்த நாட்டிற்கு சென்று வருபவர்கள் விமான நிலையத்திலிருந்து வேனிலே தங்களது உறவினர்கள் வீடுகளுக்கு விசிட்டிங் போய் விருந்துண்டு சில சொப்பிங்குகளையும் செய்து விட்டு வந்து 'இப்ப அங்க சனம் அந்தமாதிரியிருக்குது' என்று மட்டும் சொல்லாதீர்கள்.

நெஞ்சு தாங்காது

**சிந்துகா**

---

## ஆறில்லாக்,,

பயிரிடப்படும் சிலவயல்களை கிணற்று நீர்ப்பாசனத்திற்கு உடபடுத்தி அவற்றின் விளைச்சலைக் கூட்டலாம்.

யாழ்குடாவினுள் குறைந்தது 80 சதுரமைல் நன்நீர் ஏரிகளாக மாறும். அதற்குத் தேவையான வளம் எம் கையிலுள்ளது. ஆனையிறவுக்கு தெற்கே 300 சதுர மைலுக்கு மேற்பட்ட பிரதேசங்களில் பொழியும் மழையில், நிலத்துக்கடி செல்லும் நீர், நேரடியாகக் கடல் செல்லும் நீர் ஆகியவற்றைக் கழித்து குறைந்தது ஒரு இலட்சம் ஏக்கர் அடி நீரை அனுப்பினாற்கூட அது தேவைக்கு மேலதிகம். இத்திட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டுதான் எங்கள் அரசியல் கதிரை தேடுவோர் மகாவலியை வடக்கே திருப்புவோம் என்று வெற்றுக்கோசம் எழுப்பினார்கள். பல திட்டங்களை வகுத்த பொருண்மிய மேம்பாட்டு அமைப்புக்கூட இதற்கு முன்னுரிமை கொடுத்ததாகத் தகவல் ஏதும் இல்லை.

கடல் நீரை உள்வரவிடாது தடுக்கும் தொண்டமானாற்றுக் குறுக்கணையின், பலகைகள் மாற்றப் படவேண்டிய நிலையில் இருந்தன. இந்தப் பணி அண்மையில் 100 கோடி ரூபா செலவில் முற்றுப்பெற்றது மகிழ்ச்சியான செய்தி. ஏற்கனவே உள்ள அரியாலை குறுக்கணைக்கும் அதே திருத்தம் தேவை. வடமராச்சி உப்பாறு ஏரிகளைப் பிரிக்கும் கட்டுக்களின் உடைப்புக்களை தேவைக்கொப்ப அடைக்க வேண்டும்.

1960ல் ஆரம்பித்து இரண்டுமைல் வரை வெட்டப்பட்டுள்ள முள்ளியான் தொடுப்பு வாய்காலின் மிகுதி அரை மைலும் வெட்டப்பட்டு ஆனையிறவு ஏரியில் இருந்து செல்லும் மழைநீர் இவ் ஏரிகளுக்குள் பாயவேண்டும். சுண்டிக்குளம் வானும் படுகைப்பாலமும் மீள் அமைக்கப் படவேண்டும். இதனால் ஆனையிறவு ஏரியின் உவர்த்தன்மை மாறி வடமராச்சி, உப்பாறு ஏரிகளுக்கு மழை காலங்களில் நன்நீர் வழங்கும் ஏரியாக அது மாறும்.

நன்நீர் ஏரியாக மாறும் பட்சத்தில் நன்நீர் இறால் வளர்ப்புக்கு நல்ல சாத்தியம் உண்டென்று அறிக்கைகள் கூறுகின்றன. அதைவிட இந்த பாரிய ஏரியை ஆழமாக்கி கொள் திறனைக் கூட்டி ஆண்டு முழவதும் வளம் குன்றாத நன் ஏரியாக மாற்றும் சாத்தியம் உண்டோ என்பதுபற்றிய நிபுணர் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசு யாழ் குடிநீர் திட்டத்திற்காகக் கோடிக் கணக்கில் செலவிட திட்டம் வகுத்துள்ளது. அதுவும் கிளிநொச்சி மக்கள் விவசாயத்திற்கு பயன்படும் இரணைமடு நீர்த்தேக்கத்தின் நீரின் ஒரு பகுதியைப் பயன்படுத்த முடிவு செய்ததாகத் தெரிகிறது. ஆச் செலவின் சிறு பகுதியை செலவு செய்தாலே ஆறுமுகம் திட்டத்தை முற்றுப்பெற வைக்க முடியும். அதைச் சரியாகச் செயற்படுத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்கப் படவேண்டும். இதனால் யாழ்மக்கள் குடிநீர் திட்டம் மட்டுமா எளிதாகும், யாழ் குடாநாடே வளம் பெற்று நிலையே மாறிவிடும்.


## வகைபடு சிறு விளம்பரங்கள்

நீங்கள் வீடு வாடகைக்கு கொடுக்கிறீர்களா?
கணனி விற்பனைக்கு உள்ளதா?
வியாபார நிலையம் விற்பனைக்கு உண்டா?
கார் விற்பனைக்கு உண்டா?
வருமான வரி சேவைகள் வழங்குகிறீர்களா?

விற்பனைக்கு உள்ள பொருட்கள், வழங்கும் சேவைகள் எதுவாயினும், பூபாளம் பத்திரிகையிலும் இணையத் தளத்திலும் விளம்பரம் செய்யுங்கள். ஒரே கட்டணத்தில் பத்திரிகையிலும், இணையத்திலும் விளம்பரம் செய்யலாம்.

**416 284 4004**

# கனடாவில் கல்வித்துறையில் வெற்றி பெற மாணவர்கள் எவ்வாறு பயணிக்க வேண்டும்?

*சிவா ஈஸ்வரமூர்த்தி*



மனித வாழ்வில் கல்வி என்பது இன்றியமையாத ஒன்று ஆகும்.

வாழ்க்கையில் வெற்றி பெற, வாழ்வை புரிந்து கொள்ள, சமூகத்தில் ஒரு நல்ல பிரஜையாக மிளிர இது அத்தியாவசியம் ஆகும். மனிதகுலம் அறிவியல் சார்ந்து பல்வேறு சாதனைகள் புரிய இந்தக் கலவியறிவே காரணமாக அமைந்திருக்கின்றது.

கண்டம் விட்டு கண்டம் பாய்தலும், கிரகம் விட்டு கிரகம் பாய்தலும் இவ் கல்வியினாலேயே சாத்தியமானது. தீராத நோய்களுக்கு தீர்வு காண்பதற்கும் இக் கல்வியறிவே காரணமாக இருக்கின்றது. மானிடருக்கும் தேவையான உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான அறிவிலைப் பெறுவதற்கும் இக்கல்வியே காரணமாக அமைகின்றது. உலகில் சமாதானமும், ஜனநாயகம் சகவாழ்வு நிலைத்திடச் செய்வதற்கும் இந்தக் கல்வியினால் பெற்ற அறிவே காரணமாக அமைகின்றது. ஏன் ஆக்கங்களுக்கு மட்டும் அல்ல அழிவுகளும், இவ் அழிவுகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் இக்கல்வினால் பெற்ற அறிவுகளே காரணமாக இருக்கின்றது.

இலங்கையின் கல்வி முறையும் கனடிய கல்வி முறையும் முற்றிலும் வேறுவேறான தன்மைகளை கொண்டுள்ளன. நாம் இலங்கையில் போட்டி தன்மையுடைய கல்வி முறைமையிலேயே எமது கல்வியை கற்றோம். பரீட்சைகள் கூட மாணவர்களிடையே ஒருவகையான போட்டி அடிப்படையில் நடாத்தப்பட்டன. இப்பரீட்சை முடிவுகளில் முன்னிலை வகிக்கும் ஒரு சிலரே உயர் கல்வியைப் பெறும் வாய்ப்பு என்ற முறைமைகள் இலங்கையில் இருந்து வருகின்றது. தொழில் பயிற்சி சார்ந்த கல்வி முறைமை அங்கே குறைவு. பல்கலைக் கழக படிப்புகள் முடித்த பின்பு ஒரு குறிப்பிட்ட துறைசார்ந்தவர்கள் அதிக வருமானம் பெரும் தொழில் வாய்ப்புக்களை பெறும் நிலமைகளே அங்கு இருக்கின்றன.

இந்த பொருளாதார அடிப்படையில் அங்கு பல்கலைக் கழக படிப்புத் துறைகள் சம்பந்தமான மரியாதைகள் இருக்கின்றன. எனவே மாணவர்கள் அத்துறைகளை தமது முதன்மையான கல்வித் துறைகளாக கருதி இத்துறைகளுக்கான பல்கலைக் கழக

**நாம் இலங்கையில் போட்டி தன்மையுடைய கல்வி முறைமையிலேயே எமது கல்வியை கற்றோம். பரீட்சைகள் கூட மாணவர்களிடையே ஒருவகையான போட்டி அடிப்படையில் நடாத்தப்பட்டன. இப்பரீட்சை முடிவுகளில் முன்னிலை வகிக்கும் ஒரு சிலரே உயர் கல்வியைப் பெறும் வாய்ப்பு என்ற முறைமைகள் இலங்கையில் இருந்து வருகின்றது.**

அனுமதியைப் பெறுவதற்காக சதா ஓடிக் கொண்டே இருக்கின்றார்கள். பெற்றோர்களும் தமது பிள்ளைகளை அத்துறையை நோக்கி துரத்திக் கொண்டு இருந்தார்கள்.

இப்படியான சூழ்நிலையில் இலங்கையில் கல்வி என்பது ஒருவகை அதிக புள்ளிகளை பரீட்சைகளில் பெறுவதற்கான ஓட்டம் என்ற வரையறைக்குள் தன்னை சுருக்கிக் கொண்டது. இப்படிப்பட்ட சூழலில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து பின்பு பல்வேறு காரணங்களுக்காக கனடா போன்ற நாடுகளுக்கு புலம் பெயர்ந்த நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்கான கல்வி முறைமையில் இலங்கையின் நடமுறையை பின்பற்ற முயலுவது இயல்பானதே. ஆனால் கனடா போன்ற நாடுகளின் கல்வி முறை முற்றிலும் வேறு வகையானது என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதன் மூலமே நாம் எமது பிள்ளைகளை வெற்றிப்பாதையில் நகர்த்த முடியும்.

கனடா போன்ற நாடுகளில் பாலர் வகுப்பில் ஆரம்பித்து 4ம் வகுப்பு வரை பெரியளவில் பாடசாலைகளில் பாடங்கள் எதனையும் மாணவர்களுக்கு கற்பிற்பது இல்லை என்றே கூறலாம். மாறாக மாணவர்களை படம் வரைதல், வர்ணம் தீட்டுதல், விளையாட்டு விடயங்களில் ஈடுபடுத்தல். கதைகள் வாசிக்க ஊக்குவித்தல், வகுப்பறையிலேயே சினிமா காண்பித்தல், நூலகத்தைப் பாவித்தல், வகுப்பில் எவ்வாறு பங்குபற்றுதல் போன்ற ஒழுகுமுறைகளை மட்டுமே அறியத்தரப்படுகின்றன.

சிறப்பாக மாணவ குழந்தைகளுக்கு பாடசாலை என்பது ஒரு மகிழ்சிகரமான இடம் என்பது போன்ற எண்ணக்கருவை ஏற்படுத்தி பாடசாலைக்க வருதலை ஊக்கப்படுத்துதை செயன் முறையாக பாடசாலைகள் கொண்டுள்ளன. இதன் மூலம் கல்வி என்பது இலகுவானது என்ற தோற்றப்பாடை ஏற்படுத்துவர். கூடவே எண், எழுத்து, நிறம், கணனி என்ற அறிமுகப் படலங்களும் சிறிய அளவில் நடைபெறும். பாடசாலையை விட்டு மாணவக் குழந்தைகளைத் துரத்தும் எந்த கல்வி வதையும் இந்த தர வகுப்பக்களில் நடைபெறுவதில்லை என்றே கூறலாம்.

வகுப்பு 5 இல் கல்வி கற்பித்தல் என்ற ஆரம்பத்துடன் சற்று தீவிரம் காட்டப்படும். ஆனால் இக் கல்வி கற்பித்தலில் இலகு முறைக் கல்வி அணுகுமுறை, தேர்வுகள் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும். கற்பித்த விடயங்களில் நேரடியான கேள்விகளை மட்டும் பரீட்சையில் கேட்கப்படும். மாறாக மூளைக்க அதிகம் வேலை கொடுக்கும் கேள்விகள் கேட்கப்பட மாட்டாது மாணவர்கள் அதிகம் ஆசிரியரில் தங்கியிருந்து கல்வியை கற்பர். இது 6ம் வகுப்புவரை தொடரும்.

வகும்பு 7 இல் மூளைக்கு வேலை கொடுக்கும் நுட்பமான கல்வி முறை அறிமுகப்படுதப்பட்டு கல்வி கற்பிக்கப்படும். மாணவர்களுக்கான பரீட்சைகளில் வினாங்கள் நேரடியாக இல்லாமல் மூளைக்கு வேலை கொடுக்கும் நுட்பமான விடயங்கள் உள்ளக்கப்பட்டிருக்கும். மாணவர்கள் ஆசிரியரிடம் கற்கும் அதே வேளை சுயமாக கல்வி கற்கும் முறைமைக்கு ஊக்கிவிக்கப்படுவர். இதறகு ஏற்ப பயிற்சிவிக்கப்படுவர்.

வகுப்பு 9 இல் உயர் கல்விக்கான கல்வியும் அதற்கான தயாரிப்பு முறைமையுடனான கல்வி ஆரம்பிக்கப்படும். இந்த அணுகுமுறை 10 வகுப்பு வரை தொடரும். இந்த தரங்களில் நீங்கள் வேகமாக கற்றல் என்ற பயிற்சி முறமைக்கு தள்ளப்படுவீர்கள். ஆனால் ஆசிரியரின் உறுதுணை தொடர்ந்தும் அதிகளவில் இருக்கும். இதன் தொடர்சியாக 11ம் 12 வகுப்புகள் அமைந்தாலும் கூடுதலாக நீங்கள் சுயமாக கல்வி கற்கும் பழக்கவழங்கள் நிறையவே ஊக்கிவிக்கப்படும். ஆசிரியரின் உதவிகள் இன்றியே கல்வி கற்பது என்பதற்கான பயிற்சிகளை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள். இதற்கான பயிற்சிகள் வழங்கப்படும். மாணவர்களும் இதற்கேற்ப தம்மை தயார்படுத்திக் கொள் வேண்டும். எவ்வளவு நேரம் படிப்பது என்பது அல்ல இங்கு முக்கியம் எவ்வளவு படிக்கின்றோம் என்பதே இந்த வகுப்புக்களில் முக்கியமாக அமையவேண்டும். இதற்கேற்ப மிக வேகமாக கற்றல் என்ற fast track இற்குள் மாணவர்கள் உள்வாங்கப்படுவர்.

வகுப்பு 9 இல் மாணவர்கள் எதிர்காலத்தில் எத்தகைய உயர்கல்வியை கற்க போகின்றோம் என்பதை ஓரளவிற்கு தீர்மானிக்க வேண்டும். இதன் அடிப்படையில் 9 தொடக்கம் 12 ம் வகுப்பு வரை பாடங்கள் தெரிவு செய்து படிக்க வேண்டும். (கட்டாயமாக எடுக்க வேண்டி பாடங்கள் தவிர்த்து ஏனைய பாடங்களை மாணவர்கள் தமது விருப்பிற்கு ஏற்ப தெரிவு செய்ய பாடசாலைகள் அனுமதிக்கும். இந்தப் பாடங்களை மாணவர்கள் தங்கள் உயர் கல்வின் திசை வழியின் அடிப்படையில் தெரிவு செய்ய வேண்டும். உதாரணமாக எதிர்கால உயர்கல்வி கம்பியூட்டர் துறை என்றால கம்பியூட்டர் மொழிப் பாடங்களையும் விஞ்ஞானப்பிரிவு எனில் விஞ்ஞானப் (பௌதீகம். இரசாயனம், உயிரியல்) பாடங்களையும் தெரிவு செய்து கற்ற வேண்டும். இதே போல் ஏனைய துறைகளும் அமையும்.

9ம் வகுப்பில் உயர்கல்விக்கான பரந்த பிரிவை தெரிவு செய்தால் போதுமானதாகும். உதாரணமாக எதிர்கால உயர்கல்வி இயந்திரவியல் என்று தீர்மானித்தால் போதும். அது மின்சாரவியல் துறையா? அல்லது கணனி துறையா? அல்லது கட்டட நிர்மாணத்துறையா? என்று குறிப்பிட்டு தீர்மானிக்க தேவையில்லை. இப்படியான தீர்மானத்தை தமது 9ம் வகுப்பில் எடுத்து மாணவர்கள் அத்துறையில் உயர்கல்வியை பயின்றால் உயர் கல்வியில் அவர்கள் தோல்விகள்

**சரியான முறையில் திட்டமிட்டு கல்வியைத் தொடர்ந்தால் கனடா போன்ற நாடுகளில் உயர் கல்வியிலும் வெற்றிகளைப் பெற்று பட்டதாரிகள் ஆகி வெற்றி பெற்ற மனிதர்கள் வரிசையில் மாணவர்கள் சேரலாம்.**

இன்றி சாதிக்க முடியும்.

இன்னொரு முக்கிய விடயம் உயர்கல்வியான பல்கலைக் கழகங்களில் தற்போது எல்லாம் நீங்கள் எத்துறை சார்ந்து படித்தாலும் கணிதவியல் (சிறப்பாக Calculus, Linear Algebra) போன்ற பாடங்களும், பௌதீகம். இரசாயனம், உயிரியல் போன்ற பாடங்கள் எல்லாத் துறையினருக்கும் கற்பிக்கும் நடைமுறை உள்ளது என்பது கவனிக்க தக்கது. எனவே உயர் வகுப்புக்களில் பாடங்களைத் தெரிவு செய்யும் போது இப்பாடங்களை கவனத்தில் கொண்டு தெரிவு செய்தல் வேண்டும்.

9ம் வகுப்பிலிருந்து மாணவர்கள் தங்கள் உயர் கல்வியிற்கான தயாரிப்புக்களை படிப்படியாக ஆரம்பித்தால் அவர்கள் பல்கலைக் கழகம் செல்லும் காலங்களில் முதல் 2 வருடப் பல்கலைக் கழக படிப்பை மிக இலகுவாக கடந்து செல்ல முடியும். அன்றேல் கனடாவில் பல்கலைக் கழக அனுமதி பெற்று சென்றவர்களில் அங்கு கல்வி தொடர முடியாமல் பல்கலைக் கழகங்களை விட்டு வருடம் தோறும் வெளியேறும் 60 வீதமானவர்களுக்குள் நீங்களும் ஒருவராக மாற வேண்டிய துர்ப்பாக்கிய நிலமை ஏற்படலாம்.

எனவே மாணவர்களே! பெற்றோர்களே!! சரியான முறையில் திட்டமிட்டு கல்வியைத் தொடர்ந்தால் கனடா போன்ற நாடுகளில் உயர் கல்வியிலும் வெற்றிகளைப் பெற்று பட்டதாரிகள் ஆகி வெற்றி பெற்ற மனிதர்கள் வரிசையில் மாணவர்கள் சேரலாம்.

கனடா போன்ற நாடுகளில் ஒரு மாணவர் பல்கலைக் கழகம் வரை சென்று கல்வியை முடிப்பதற்கான அடிப்படைத் தகுதி "கட்டையிலிருந்து புறப்பட்டு பின்பு கட்டைக்கு வருவதாகும்". அது என்ன கட்டையிலிருந்து புறப்பட்டு கட்டைக்கு வருவது? அதாவது காலையில் பாடசாலைக்கு நேரத்திற்கு சென்று பாடசாலை முடிந்ததும் மீண்டும் உடன் வீட்டிற்கு திரும்புதல் ஆகும். இதற்குள் வகுப்புகளுக்கு ஒழுங்காக செல்லுதல், வீட்டுப்பாட (ழழஅநறழசம) வேலைகளை முடித்தல், ஆசிரியர்களால் வழங்கப்படும் Project, Assignment போன்றவற்றை உரியகாலத்தில் முடித்தல் என்பன உள்ளடங்கும்.

இவ்வாறு செயற்படும் ஒரு மாணவன் நிச்சயம் பல்கலைக்கழ அனுமதி பெற்று பட்டப் படிப்பை முடிப்பான். மாறாக வெள்ளிக் கிழமை மாலை காணமல் போன மாணவன் மீண்டும் ஞாயிறு சாமம் வீடு திரும்பினான் என்ற நடைமுறையைக் கொண்டிருந்தால் அந்த மாணவனுக்காக யாரும் வருத்தப்பட்டும் ஏதும் நல்லது நடைபெறப் போவதில்லை.

கனடா போன்ற நாடுகளில் மாணவர் ஒருவர் பல்கலைகழக உயர் படிப்பிற்கு தகுதி பெறுவதற்கு எந்த பிரத்தியேக வகுப்புக்களும் எந்த வகுப்பிலும்

எடுக்கத் தேவையில்லை. பாடசாலை ஆசிரியர்களால் நடாத்தப்படும் (பிரத்தியேக உட்பட) வகுப்புகள், நூலகம், இணையத்தளம், நண்பர்கள், உறவினர்கள் என்ற வட்டங்களினூடு தமக்கு தேவையான கல்வி அறிவை பெறலாம், பாடங்களின் சந்தேகங்களை தீர்த்துக் கொள்ள முடியும். பிரத்தியேக வகுப்புக்கள் எதனையும் பிரத்தியேக ஆசிரியர் மூலம் கற்கவேண்டிய தேவை இல்லை. ஆனால் மாணவர் ஒருவர் தனது கல்வித் தரத்தின் மட்டத்தை ஒரு படி கூடுதலாக பேண வேண்டின் மட்டும் ஒரு பிரத்தியேக ஆசிரியரின் உதவிகள் தேவைப்படலாம். அல்லது ஏதாவது விசேட நிலைமைகளுக்கு சிறிது காலம் பிரத்தியேக ஆசிரியரின் உதவிகளை பெற்றுக் கொள்ளலாம். மற்றையபடி பிரத்தியேக வகுப்பு கனடிய கல்வி முறைக்கு தேவையற்ற ஒன்று.

இலங்கை போன்று கனடிய கல்வி முறை போட்டிக் கல்வி முறை அல்ல. பரீட்சைகள் மாணவர்கள் சித்தியெத்த வேண்டும் என்ற அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. இறுதிப் பரீட்சையில் 30 தொடக்கம் 40 வீதப் புள்ளிகள் மட்டும் எடுக்க வேண்டிய வகையில் மாணவருக்கான மொத்த புள்ளிகளும் வரையறுக்கப்படுகின்றன. ஏனைய புள்ளிகள் ஏற்கனவே Home work, Assignment, Project, இடைத் தவணைப் பரீட்சை போன்றவற்றால் வழங்கப்பட்டிருக்கும். இலங்கையில் மாணவர்கள் சித்தி எய்துவதில் சிரமங்களை எதிர் நோக்கும் வகையில் பரீட்சைக்கான வினாக்கள் தயாரிக்கப்படுகின்றன. மொத்தப் புள்ளிகளும் இறுதிப் பரீட்சையில் எடுக்க வேண்டும் என்ற வகையில் புள்ளிகள் வழங்கும் முறை திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையில் உயர்கல்வி வரை பூரணமான இலவசக் கல்வி முறை நடைமுறையில் உள்ளது. கனடா போன்ற புலம் பெயர் தேசங்களில் இலவசக் கல்வி (உயர் கல்வி) என்ற பேச்சுக்கே இடம் இல்லை. கனடா போன்ற நாடுகளில் 3 பிள்ளைகளை முழுமையாக பணம் செலுத்தி உயர் கல்வி கற்பிக்க வேண்டின் 4 அறை வீட்டை விற்று செலவு செய்தாலும் மாளாது. கூடவே இலங்கையில் உள்ளது போன்ற தேசிய ரீதியிலான ஒரு பரீட்சை பல்கலைக் கழக அனுமதியை தீர்மானிக்கும் முறை கனடா போன்ற நாடுகளில் இல்லை. ஒவ்வொரு பாடசாலையும் (சிறப்பாக ஒவ்வொரு தனி ஆசிரியரும்) தமது மாணவருக்கான தனியான பரீட்சையை நடத்துவர். எனவே ஒரே வகையாக மாணவர்களின் திறமையைத் தரப்படுத்தல் (இங்குமா....? தரப்படுத்தல்) என்ற அளவு கோல் கனடா போன்ற நாடுகளில் இல்லை.

புலம் பெயர் தேசங்களில் இலங்கை போலன்றி மாணவர்கள் தாம் விரும்பும் எத்துறையிலும் தமது உயர்கல்வியை முடிக்கலாம். தொடர்ந்தும் அவ் அவ் துறைகளில் சாதிக்கவும் முடியும். துறைகளில் பாரிய வித்தியாசம் (வேலைவாய்ப்பு) இல்லையென்றே கூறலாம். கூடவே (உயர்)கல்வி தொழில் பயற்சி சார்ந்த வகையில் அமைவதினால் உயர் கல்வியை முடித்ததும் அத்துறை சார்ந்து வேலை எடுப்பதும், அத்துறை சார்ந்து வேலை செய்வதும் அதிகளவு கடினம் இல்லை. மாறாக இலங்கையில் வெறும் புத்தகப் படிப்போடு கல்வி முறைமைகள் இருப்பதினால் பட்டப்படிப்பின் பின்பு வேலையில் சேரும் போது பயிற்சி அற்ற உணர்வுகளும், சிக்கல்களும் ஏற்படுகின்றன பட்டதாரிகளுக்கு. ஆசிரியர், வைத்தியர் போன்ற சில துறைகள் தவிர்ந்து எனைய துறைகளில் இது பெரும்பாலும் ஏற்படுகின்றது.

எனவே மாணவர்களே! பெற்றோர்களே!! எமது தாயகத்து கல்வி முறைமைகளுக்கும், கனடா போன்ற புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள கல்வி முறைமைகளில் உள்ள பாரிய வேறுபாடுகளை பகுத்தாய்வு செய்து சரியான நடைமுறையை அறிந்து கொள்வோம். இதன் அடிப்படையில் எமது மாணவர்களின் கல்வியைத் தொடர ஆவன செய்வோம். இதன் மூலம் எமது வருங்கால நம்பிக்கை நட்சந்திரங்களை வெற்றிப் பாதைக்கு வழி சமைப்போம். ■

# தொலைந்து போகும் பியேர்சனின் கனவு

தர்சன்

**பியேர்சன் வடிவமைத்த வெளியுறவுக் கொள்கையையே பிற்காலங்களில் ஆட்சியைப் பிடித்த லிபரல் அரசுகளும் சரி கென்சர்வேடிவ் அரசுகளும் சரி கூடியவரை கடைப்பிடித்தன,**

கனடா ஈரானுடனான இராஜதந்திர உறவை அறுத்துக்கொள்வதாக செப்டம்பர் மாதம் 7ம் திகதி கனடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் அறிவித்தார்.

ஈரானில் உள்ள கனடியத் தூதரகம் உடனடியாக மூடப்பட்டது.

ஈரானிய இராஜதந்திரிகளுக்கு கனடாவிலிருந்த தமது தூதரகத்தை மூடிவிட்டு வெளியேறுவதற்கு ஐந்துநாள் அவகாசம் வழங்கப்பட்டது. கனடா எடுத்த இந்த திடீர் முடிவுக்கு அமைச்சர்கள் ஜோன் பெயார்ட், விக் ரேவ்ஸ், ஜேசன் கெனி ஆகியோர் சில காரணங்களை கூறியிருக்கிறார்கள். ஈரான் மனித உரிமைகளை மீறுகிறது, பயங்கரவாதத்தை ஆதரிக்கிறது. அணுகுண்டு தயாரிக்க முயல்கிறது. வியன்னா உடன்படிக்கையை மதிப்பதில்லை. கனடாவில் சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது.

இவ்வாறான கருத்துக்களின் அடிப்படைகளில் அமைச்சர்கள் கூறிய காரணங்கள் அமைந்திருந்தன. இருப்பினும், கனடிய அமைச்சர்கள் ஈரானுடனான உடனடி உறவுத் துண்டிப்பிற்கு புதிய காரணம் எதனையும் வழங்கவில்லை.

கனடாவுக்கான ஈரானின் உயர் இராஜதந்திரி கம்பிஸ் சேக் ஹசானியோ கனாடவின் இந்தத் திடீர் முடிவை எதிர்பார்த்ததாக CBC தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் கூறியிருக்கிறார். மேலும், கனடாவின் இந்த முடிவில் வேறுநாடுகள் செல்வாக்கு செலுத்தியிருக்கின்றன எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

கனடாவின் இந்த முடிவை இஸ்ரேல் வரவேற்றது.
ஆனால், ஈரானில் பணியாற்றிய கனாடாவின் முன்னாள் இராஜதந்திரிகள் சிலர் கனடாவின் முடிவுடன் உடன்படவில்லை.

"ஈரான் மத்தியகிழக்கின் முக்கியநாடுகளில் ஒன்று. அங்கு என்ன நடக்கிறது எனபதை அறிய ஈரானில் கனடாவின் தூதரகம் இருப்பது அவசியமானது..." என்ற கருத்தை முன்னாள் ஈரானுக்கான கனடியத் தூதுவர் கென் ரெய்லர் தெரிவித்திருக்கிறார்.

இப்படி முன்னாள் ஈரானுக்கான இராஜா தந்திரிகள் சிலரையும் சர்வதேச அவதானிகள் சிலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திய இந்த முடிவின் பின்னாலிருக்கும் உண்மையான காரணம் ஹார்ப்பர் அரசுக்கே வெளிச்சம்.

ஆனால், ஹார்ப்பர் அரசின் இந்த முடிவு மறைந்த கனடிய பிரதமர் லெஸ்டர் பியேர்சன் விட்டுச் சென்ற கனடிய வெளியுறவுக் கொள்கைக்கு வெகுதூரத்திலிருக்கிறது.

பியேர்சன் வகுத்த கனடிய வெளியுறவுக் கொள்கையே பிறநாடுகள் மத்தியில் கனடாவுக்கு இருக்கும் நன்மதிப்பிற்கான முக்கிய காரணம். சர்வதேசச் சட்டத்தை மதித்தல், தன்னிச்சையாக முடிவுகளை எடுக்காமல் சர்வதேச நாடுகள் பங்களிக்கும் நிறுவனங்களூடாக சர்வதேச முரண்பாடுகளை முடிந்தவரை தீர்த்தல், உலக அமைதிக்கு நேர்மையாகச் செயற்படுதல் முதலிய விழுமியங்களே பியேர்சனின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைகள்.

இவ்விழுமியங்களூடாக உருவான வெளியுறவுக் கொள்கையே 1956ல் எழுந்த சுயேஸ் கால்வாய்ப்பிரச்சனையை சுமூகமாக தீர்க்க உதவியது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னான பனிப்போர் காலகட்டத்தில் எழுந்த இந்த பிரச்சனையில், பிரிட்டன் பிரான்ஸ் இஸ்ரேல் அணிக்கு கனடா கண்ணை மூடிக்கொண்டு சாயாமல் நேர்மையாக செயற்பட்டதனூடாக ஒரு யுத்தத்தைத் தவிர்க்க உதவியது. இங்கேதான் கனடாவுக்கான தனித்துவமான வெளிநாட்டுக் கொள்கை பிறந்தது.

இந்த தனித்துவமான வெளியுறவுக் கொள்கைக்கு வடிவம் கொடுக்க முன்னின்று உழைத்தவர் அன்றைய வெளிவிவகார அமைச்சர் லெஸ்டர் பியேர்சன்.

பியேர்சன் வடிவமைத்த வெளியுறவுக் கொள்கையையே பிற்காலங்களில் ஆட்சிக்யைப் பிடித்த லிபரல் அரசுகளும் சரி கென்சேவேடிவ் அரசுகளும் சரி கூடியவரை கடைப்பிடித்தன.

ஆனால், ஹார்ப்பர் தலைமையிலான கேன்சேவேடிவ் அரசு ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து கனடாவுக்கு ஒரு புதிய வெளியுறவுக் கொள்கையை வகுக்கிறது.

இந்த வெளியுறவுக்கொள்கையின் அடிப்படைகள் இவைதான்:

இஸ்ரேல் சர்வதேசச் சட்டத்தை மீறினாலென்ன மீறாவிட்டாலென்ன அதற்கு எப்போதும் ஹார்ப்பர் அரசு ஆதரவு வழங்கும். ஏனெனில், ஹார்ப்பர் ஆட்சியில் அமர்வதற்கு பெரும்பான்மையான ஜூத மக்களின் வாக்குகள் முக்கியமானது.ஸ சர்வதேச பிரச்சனைகளென்று வரும்போது முடிந்தவரை நேச நாடுகளின் அணியில் நிற்பது அல்லது தன்னிச்சையான முடிவுகளை எடுப்பது.

இந்த அடிப்படைகளில் உருவான வெளியுறவுக்கொள்கையால்தான் பல உலகநாடுகள் மத்தியில் தனக்கிருந்த நன்மதிப்பை கனடா இழந்துவருகிறது. இந்த வெளியுறவுக் கொள்கையே 2010ல் ஐ.நா பாதுகாப்புச் சபையில் சுழற்சிமுறையில் வரும் ஆசனத்துக்கான போட்டியில் கனடாவைத் தோற்கடித்தது. இதே கொள்கையே இப்போது ஈரானுடனான உறவையும் துண்டித்திருக்கிறதுபோல் தெரிகிறது.

# யாருக்குச் சொல்லியழ? 3

இளவழகன்

கனடாவில் மாதாந்தம் வெளிவரும் "தமிழர் தகவல்" தனது ஆவணி மாத இதழில் பிரசுரித்துள்ள ஆசிரியர் தலையங்கத்தை "தாயக பயணங்கள்" என்று தலைப்பிட்டு அதில் வெளிநாட்டு தமிழர் இலங்கை சென்று வருவது பற்றி விசனம் கொண்டுள்ளது அந்த ஆசிரிய தலையங்கம் அந்த ஆசிரிய தலையங்கம் "வடக்கில் வசந்தம் வீசுவதாகக் கருதி அங்கு "கலர்" காட்டப் பயணம் மேற்கொள்ளும் புலம்பெயர் உறவுகள், "அலுகோசுகள்" ஆட்சியில் உயிருக்கு உத்தரவாதமில்லை என்பதை உணர வேண்டும்" என்று முடிக்கிறது. அது பக்கம் 2 இல். அது சரி பக்கம் 18 இல் என்ன?.

பக்கம் 18 இல் உள்ள தலைப்பு "தமிழீழம் குரும்பசிட்டியில் நடைபெற்ற ஜேர்மன் "வெற்றிமணி" ஆசிரியரின் மணி விழா" என்று தொடர்கிறது. அந்த கட்டுரை "...தமிழீழம் குரும்பசிட்டியில் கடந்த மாதம் 3ஆம் சிறப்பாக நிகழ்ந்தேறியது" என்றும் குறிப்பிடுள்ளது.

ஐயா ஆசிரியரே. எங்களுக்கு ஞாபக மறதி அதிகம் என்று எங்கள் தமிழ் தலைவர், தமிழ் பத்திரிகையாளர் எல்லோர்க்கும் நன்கு தெரியும் தான். ஆனால் 2ஆம் பக்கத்தில் இருந்து 18ஆம் பக்கம் போவதற்குள்ளேயா? ஜேர்மன் நாட்டிலிருந்து சென்ற இந்த "வெற்றிமணி" குரும்பசிட்டியில் காட்டியது கலரா? அங்கு மட்டும் ஏன் வெள்ளை வானில் அலுகோசுகள் வராமல் எல்லாம் சிறப்பாக நிகழ்ந்தேறியது?

தப்பியோடிய நக்கிற நாய்கள் (நன்றி காட்டவைக்கவி) பலவிதம். சில மொத்த குடும்பமாக ஆச்சி அப்புவுடன் வெளிநாடு சென்றுள்ளது. அவர்களுக்கு அங்கு செல்ல உறவுகள் எதுவும் இல்லை. மற்றும் சிலருக்கு இலங்கை போக விருப்பம் ஆனால் நீங்கள் கூறியபடி அவர்களின் பழைய படங்களால் கொண்டது பயம். ஆனால் எங்களில் சிலருக்கு பாதிக்குடும்பம் அங்கே. அதனால் நாம் போவோம். அது கலராய் இருந்தாலென்ன? கரு இருளாய் இருந்தாலென்ன?

இலங்கையில் 2009 இற்கு முன்னரும் கூட உயிருக்கு உத்தரவாதம் இருந்திருக்கவில்லைத் தானே. முன்னர் யாழ்ப்பாண பத்திரிகையொன்று ஒரு கார்டூன் வரைந்து இருந்தது. அதில் ஒரு மேசை. அதன் பின் அமர்ந்திருப்பவர் பிரபாகரன். மேசையின் கீழே ஒரு மாணவர் மறைத்து வைக்கப்படிருந்தார். அது விஜிதரன். மேசையின் பின் அமர்ந்திருந்த பிரபாகரன் சொன்னார் "எங்களிடம் விஜிதரன் இல்லை" என்று.

இதையெல்லாம் யாருக்கு சொல்லியழ?

# அல்லாவின் பெயரால்...

## பரம் ஜி பார்வையில்....

மனித சரித்திரத்தில், கண்ணகியின் காலத்தில் இருந்து தொடர்ச்சியாக இன்னமும் மனிதர்களால் கையாளப்படும் செயற்பாடொன்று என்னவெனில், நடந்துவிட்ட தவறுக்காக நீதி நியாயம் கேட்க வேண்டுமாயின் செய்ய வேண்டியதெல்லாம், தாம் வாழும் நகரங்களையே கொழுத்தி சுட்டு எரிப்பது ஒன்றுதான் போல தெரிகிறது. சென்றவாரம் எஜிப்து நாட்டின் கெய்ரோ நகர் முதலாக, லிபியாவின் பெங்காசி, யேமனின் சாணா போன்ற இடங்களில் நடந்த கலவரங்களில் பலகோடி ரூபாக்கள் பெறுமதியான அந்நாட்டு மக்களின் சொத்துக்கள் தீக்கிரை யாக்கப்பட்டன. காரணம், அவலை நினைத்து உரலினை இடிக்கும் கதை போல, யூ டியூப் இணைய தளத்தில், கருத்து சுதந்திரம் என்ற பெயரில் சில அமெரிக்க விசமிகளால் வெளிவிடப்பட்டிருந்த இனசன்ஸ் ஒவ் முஸ்லிம் எனும் விடியோ திரைப்படம் மூலம் அல்லாவின் பெருமைதனை அமெரிக்க அரசு அவமதித்து விட்டதாக காரணம் கூறி, அதற்காக ஐக்கிய அமெரிக்காவிற்கு பாடம் புகட்டுவதாக எண்ணி! தமது நாடுகளில் இருக்கும் சொத்துக்களை தாமே அடித்து உடைத்து எரித்து சாம்பராக்கி உள்ளனர். இது எப்பிடி இருக்கு?

முதலில் இணைய தளத்திற்கு சென்று அல்லாவை அவமதிக்கும் அத்திரைப்படம், இனசன்ஸ் ஒவ் முஸ்லிமினை ஒரு முறை தரிசித்து, அப்படம் குறைந்த பட்சம் மதுரையை எரிக்க காரணமாக இருந்த அந்த கால்சிலம்பிற்கு ஈடாகவாவது இருக்கின்றதா என பார்த்துவிடலாம் என்று தேடினால், உடனே இணைப்பும் கிடைத்தது. அதன் முதல் முழு நிமிடம் கூட முற்றாக பார்க்க முடியவில்லை. காரணம், அதில் சொல்லப்பட்டிருக்கும் கதை, அதனைச் சொன்ன விதம், கதாபாத்திரங்களின் நடிப்பு, தொழில்நுட்ப உத்திகள் என எல்லாமே சினிமா கற்றுக்குட்டிகள் கூட கைகொட்டி எள்ளி நகையாடும் அளவிற்கு மோசமாக இருந்தன. முன்பு மலையாள மொழியில் எடுக்கப்பட்டு வெளிவந்திருந்த சில பலான படங்களின் (நீலப்படங்களுக்கு ஒப்பாக கதை சொல்லி எடுக்கப்படும் படங்கள்) தரம், இனசன்ஸ் ஒவ் முஸ்லிமினை விடவும் மேல் என எண்ணும் அளவிற்கு மோசமாக இருந்தது. அட, பரம் ஜி பார்க்க குடுத்து வைத்த அந்த மலையாள பலான படங்கள் எங்களுக்கு பார்க்க கிடைக்கவில்லையே என்று நீங்கள் எண்ணி ஏங்க ஆரம்பித்தால், அவற்றை பற்றி இங்கு எடுத்து சொன்ன குற்றத்திற்கான முழுப்பழிகளையும் இனசன்ஸ் ஒவ் முஸ்லிம் படத்தின்மீது போட்டு விடுங்கள்.

சகல இசுலாமிய மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் நோக்கத்திற்காக மட்டும் என்றே ஒரு சில அடி மட்டரக எண்ணங்களையும் நடத்தைகளையும் கொண்டிருக்கும் சில அமெரிக்கர்களால் தயாரிக்கப்பட்டிருக்கும் கீழ்த்தரமான அத்திரைப் படத்தின் பிற்புலங்களை அறிந்து கொள்ளும் திராணிகள் அற்ற சில வறிய இசுலாமியர்களை தமக்கு சாதகமாக்கி, கொலை கொள்ளை திருட்டுக்கள் செய்து வாழும் கொள்ளை கூட்டத்தவர்கள் பாணியில், இசுலாத்தின் பெயரால், நாட்டுக்கு நாடு அதிகாரங்களை கைப்பற்றும் நோக்கங்களுடன், போராட்டங்கள் என்ற பெயர்களில் அடாவடி தனங்கள் செய்வதே தொழிலாக, அவற்றை திட்டமிட்டு செய்து கொண்டிருக்கும் பயங்கரவாதிகள் சிலரின் அச்செயற்பாடுகள், அல்லாவை தொழுவதுடன் அனைத்து மக்களையும் ஜீவராசிகளையும் அன்புடன் போற்றி மதித்து நடக்கும் பெரும்பான்மை இசுலாமிய சமூகத்தவர்களை தலை குனிய வைத்திருக்கும் என்றே சொல்ல வேண்டும்.

எந்த ஒரு மதத்தினை சார்ந்தவராக இருந்தபோதும் தாம் நம்பிக்கை வைத்து வணங்கும் ஆண்டவனை மற்றய மதத்தவர்கள் இழிவு படுத்தும் போது கோபம் உண்டாவது சாத்தியமே. ஆதற்காக தமது அதிருப்திகளை தெரிவித்து கொள்ளுவதும் இயல்பே. அவற்றை கண்ணியமாக, மற்றய இனங்களை சார்ந்தவர்களின் ஆதரவுகளையும் பெற்று கொள்ளும் வகையில் செயற்படுவதே எதிர்காலத்தில் இதேவகையான பிரச்சனைகள் வரவிடாமல் தடுப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதனை நடுநிலைமையாக சிந்தித்து நடந்து கொள்ளும் பெரும்பான்மை இஸ்லாமியர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

இன்று உலகின் பலபாகங்களிலும் அவ்வீடியோ படத்திற்கு எதிரான இசுலாமியர்களின் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்ற அதே வேளையில் ஐக்கிய அமெரிக்காவில்கூட, டெக்சாஸ் மாநிலத்தில் வாழும் சில இஸ்லாமியர்கள் அப்படத்திற்கான எதிர்ப்புகளை தெரிவிக்கும் ஆர்ப்பாட்டங்களை நாட்டின் பல பாகங்களிலும் நடாத்த உள்ளதாக கடைசியாக கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. பொது மக்கள் உடமைகள், அரச கட்டடங்கள் வாகனங்கள் போன்றவற்றை உடைத்து எரித்து கொளுத்தும் வகையான அடாவடி போராட்டங்களாக இல்லாமல் இருக்கும் வகையில் பார்த்து கொண்டால் அதுவும் நியாயமே.

நடுநிலைமையாக சிந்தித்து கண்ணியமாக செயற்படும் இஸ்லாமியர்கள் ஞாபகத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயம் என்னவெனில், அல்லாவை இழிவுபடுத்தும் செயல்களுக்காக மட்டும் எதிர்ப்பு குரல்கள் கொடுத்து விட்டு பேசாமல் இருந்து விடாமல், சில காலங்களுக்கு முன் உலகத்திற்கு அன்பினை போதித்த கௌதம புத்தரின் உருவச்சிலையை இஸ்லாமிய தலிபான் பயங்கரவாதிகள் ஆப்கானிஸ்தானில் குண்டுகள் வைத்து தகர்த்தெறிந்தது போன்ற காட்டுமிராண்டி தனமான செயற்பாடுகளில் ஈடுபடும்போதும்கூட அச்செயல்களுக்கு எதிராகவும் குரல் கொடுக்க முன்வரவேண்டும். அல்லாவின் பெயரால் அவற்றையும் செய்தால் நிச்சயமாக உலகம் எங்கும் அமைதி கிட்டும்.

பார்வைகள் தொடரும்,,

என் எண்ணத்தில் இருந்து...

# கழுத்தை மூடு! கவனமாய் இரு!

## நமு பொன்னம்பலம்

அண்மைகாலமாக அநேகர் வாயிலும் "கழுத்தை மூடு! கவனமாய் இரு!" என்று ஒரு முணுமுணுப்பு. கோவிலுக்கு சென்ற போது பிராமணர்கள் கூட இதனை பக்தர்களுக்கு எடுத்தியம்புகிறார்கள். நாம் வாழும் சமூகத்தில் இந்த வாசகம் மந்திரமாய் தற்போது ஒலிக்கிறது.

காரணம் நகை திருட்டுக்கள், வீடு புகுந்து திருட்டு என கள்வர் பயம் எங்கும் வியாபித்திருகிறது. செய்திகள் எங்கும் திருட்டு பற்றியும் அதன் தாக்கங்கள் பற்றியும் பேசுகின்றன.

இதற்கெல்லாம் ஒரு படி மேல் சென்று நமது அரசியல் பிரமுகர்கள் இதே கூட்டு பிரார்த்தனையில் தம்மையும் ஈடுபடுத்தி சமூகம் எச்சரிக்கையோடு இருக்கும்படி வேண்டி நமது சமூகத்தை "கவனமாய் இரு" என முழங்கியிருக்கிறார்கள். தாயக அரசியலில் தமிழ் முழக்கம் செய்த அரசியல் கடந்து கள்வர் பயம் கூட அரசியலே ஆகும் என நாம் மாற்றி அமைகின்றோமா?

எமது தமிழ் சமூகத்திலும் சரி. கனடா வாழ் மக்கள் சமூகத்திலும் சரி. கள்வர் பயம் வந்து சமூக மட்டத்தில் இச்செய்தி வலம் வருவது உண்மை.

இதற்கு நாம் காண முனையும் காரணங்கள் தான் எவை. எவ்வாறு நாம் இந்தச் சமூகத்தின் திருட்டு பயத்தை போக்க நடவடிக்கை எடுக்க முயல்கின்றோம் என்பதை யோசிக்க வேண்டும்.

சில நாட்களுக்கு முன்னர் போலீஸ் அதிகாரி ஒருவரை அணுகி உதவி கோரலாமே என்ற ஆதங்கத்தில் அணுகினேன். அவரோ ஏன் நமது சமூகம், சமூகம் சார்ந்த பிரச்சனைகளுக்கு போலீஸ் பகுதியை நாடுவதில்லை என குறைபட்டார்.

நாம் நமது வீட்டுக்குள் பிரச்சனை ஏற்பட்டால் மட்டுமே உதவி கோருகின்ற சமூகமாய், தனி மனிதர்களாய் மட்டுமே செயல்பட விரும்புகின்றோம். அதுவரை போலீஸ் உதவியை நாடாத தனி மனிதர்களாய் நாம் இச்சமூகத்தில் உழல்கின்றோம்.

நமது போலீஸ் பிரிவை அணுகாத குணாம்சத்தை பயன்படுத்தி இனத்தின் பெயரால் இயங்கிய தனி மனிதர்கள் சொத்து சேர்த்த சங்கதிகள் போலீஸ் பகுதிக்கும் எமக்கும் தெரியாத ஒன்றல்ல.

எமது மக்கள் வாழ்வியலில் இந்த நாட்டில் மனிதர்களாக வாழ விரும்பின் இந்த நாட்டில் உள்ள சமூகம் சேர்ந்த அமைப்புகளுடன் எமை இணைத்து பணியாற்ற முன் வர வேண்டும். இதற்காக சமூகத்தின் பெயரில் இயங்கும் கொள்ளையர் கூட்டத்துடன் வீடு சென்று பணம் பறிப்பது என்று அர்த்தமாகாது.

உண்மையான சமூக நலன் விரும்பிகளை இனம் காணுங்கள்.

**Private Tuition Classes**

Math: Grade 9, 10, 11 and 12
Physics: Grade 11 and 12

Please contact: Siva
**416 271 8467**
**416 265 9138**

தனித்து நிற்கும் விளம்பரங்கள் வாசகர் கண்களில் படும்!

தாயகத்திலிருந்து எமது செய்தியாளரின் நேரடிச் செய்திகள், சிந்தைக்கு இன்பம் தரும் சுவாரஷ்யமான ஆக்கங்களின் நடுவே

உங்கள் விளம்பரம்!

உங்கள் சேவைகள், விற்பனைப் பொருட்கள்

எதுவாயினும்

புது யுகம் படைக்கும் பூபாளம் வார இதழில் விளம்பரம் செய்யுங்கள்!

**416 284 4004**

மறத்தமிழர் பண்பாட்டில் காலங்கள் கடந்தும் மறையாப் பொருளாய் இருப்பது இந்த மொட்டைக் கடதாசி. ஊரில் உண்மை விளம்பிகள் எக்கச் சக்கம். ஏதோ பதவியில் இருப்பவன் பற்றி மேலிடத்திற்கு மொட்டைக் கடிதம் அனுப்புவதாயினும், பின்னால் அலைந்தும் கடைக்கண் பார்த்து அருளாத பெண் பற்றி தந்தைக்குக் கடிதம் எழுதுவதாயினும், அடையாளம் காட்டாது கரந்துறையும் உண்மை விளம்பிகளின் தொல்லை சொல்லி மாளாது.

கட்டழகுக் காரிகை மேல் மையல் கொண்டு, கடிதம் கொடுக்கப் போக, காலணியைக் காட்டிய காரிகை பற்றி அப்பனுக்கு எழுதுவான் ஐயாக்குட்டி...

'ஐயா, உமது மகள் ஆச்சிக்குட்டி உவன் அப்புக்குட்டியுடன் ஆடித் திரிகிறாள்'.

ஆச்சிக்குட்டிக்கு வீட்டுக்குள் பூட்டி வைத்துப் பூசை நடக்கும். அப்பாவி அப்புக்குட்டி ஆச்சிக்குட்டியின் அண்ணன் மார்களால் நையப்புடைக்கப்படுவான்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்.

ஆச்சிக்குட்டியைப் பழி வாங்கிய மகிழ்ச்சி. வில்லன் அப்புக்குட்டி ஒழுங்கைப் பக்கம் தலைக்கறுப்புக் காட்ட மாட்டான், போட்டிக்கு வில்லன் குறைந்த மகிழ்ச்சி.

பக்கத்து வீட்டு வேலிப் பிரச்சனையா? பள்ளிக்கூட வாத்தியாரோடு பிரச்சனையா? தன்னால் நேரடியாக முகம் கொள்ள முடியாத எந்தப் பிரச்சனைக்கும் தமிழனுக்கு இருக்கவே இருக்கிறது மொட்டைக் கடிதம்.

இந்த மொட்டைக்கடிதங்களால் பிரிந்த குடும்பங்கள் எத்தனை? பொலிடோல் குடித்த பெண்கள் எத்தனை? தண்ணியில்லாக் காட்டுக்கு தலைமறைவான தலைமை வாத்தியார்கள் எத்தனை?

தன் அடையாளமே தெரியக்கூடாது என்ற ஒரே நோக்கத்தில் தானே, மூலைக்கு மூலை மண்ணின் மைந்தர்கள் வைத்த முறைப்பாட்டுப் பெட்டிப் பக்கமே தமிழன் தலை வைத்துப் படுக்காமல் இருந்தான். வேலிச்சண்டைப் பக்கத்து வீட்டுக்காரனுக்கு ஆமிக்காரனோடு சகவாசம் என்று இயக்க முகாமுக்கு மொட்டைக் கடிதம் எழுதினால் பிரச்சனை முடிந்தது. பக்கத்து வீட்டுக்காரனின் வேலி மட்டுமல்ல, வீடும் வசமாகும்.

கையெழுத்தில்லா ஒரு மொட்டைக்கடிதத்தை வைத்தே இத்தனை சாகசம் காட்டிய தமிழனால் ஏன் மொட்டைக் கடிதம் எழுதி தமிழீழம் பெற முடியவில்லை என்பது தான் கியூறியஸ்க்கு இன்னமும் புரியவில்லை.

இலங்கை சீனாவுடன் ஆடித் திரிகிறது என்று இந்தியாவுக்கு ஒரு மொட்டைக் கடிதம்.

இலங்கை திருகோணமலையை இந்தியாவுக்கு கொடுக்கிறது என்று அமெரிக்காவுக்கு ஒரு மொட்டைக் கடிதம். இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கையைப் பங்கு போட முயற்சிக்கின்றன என்று சீனாவுக்கு ஒரு மொட்டைக் கடிதம்.

நாராயணனும் சிவசங்கர் மேனனும் மகிந்தவுக்கு கதவைப் பூட்டி வைத்துப் பூசை நடக்கும், ஆச்சிக்குட்டியின் அப்பன் போல.

இந்து சமுத்திரத்தில் அம்பாந்தோட்டைப் பக்கமாய் வால் ஆட்டும் அமெரிக்காவை சீனா நையப்புடைக்கும், அண்ணன்மார் போல.

குட்டையைக் குழப்பி விட்டு

# மொட்டைக்கடிதமும் சகாப்த புருஷர்களும்

## பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

வேடிக்கை பார்க்க வேண்டியது தான். கொழுவ விட்டு, கூத்துப் பார்க்கும் தமிழ்ப் பாரம்பரியத்தைக் கைக்கொள்ள வேண்டியது தான்.

தமிழீழம் தானே மலர்ந்திருக்கும்.

அட, விடுடா, வயித்தெரிச்சலைக் கிளப்பாதே!

ஓகே... இப்ப கியூறியஸ் உங்க மனம் புண்படும்படி அப்படி என்ன சொல்லியிட்டான்? பெட்டிஷன் அடித்தல் என்று தமிழ்ப் பண்பாட்டின் மையப் பொருளாய் விளங்கிய ஒரு பெருமைக்குரிய விடயம் பற்றித் தானே பேசியிருக்கிறான்.

இன்றைக்கும் இணையத்தில் பின்னூட்டம் என்ற பெயரில் தன்னை அடையாளம் காட்டாமல் மற்றவர்களை வசை பாடித் தொடரும் ஒரு பாரம்பரியம் பற்றித் தானே சொல்கிறான்.

புலன் பெயர்ந்த தமிழன் எதற்கு அனாவசியமாய் முத்திரைக்குப் பணம் செலவழிப்பானேன் என்று போட்டோக் கொப்பிக்கு செலவழித்து மொட்டை நோட்டீஸே விடத் தொடங்கினான். திகிலூட்டும் உண்மைகளும், மயிர்க் கூச்செறிய வைக்கும் தகவல்களும், முள்ளந்தண்டை உறைய வைக்கும் குற்றச்சாட்டுகளும் என தமிழனின் பாரம்பரியம் தொடர்ந்தது. உண்மை விளம்பிகள் நலன் விரும்பிகள் என பெயரை மாற்றிக் கொண்டார்கள்.

கடைகள் எங்கும் பத்திரிகைகளோடு போட்டி போட்டுக் கொண்டு மொட்டை நோட்டீஸ்கள் வந்தன. பத்திரிகை எது, மொட்டை நோட்டீஸ் எது என்ற வித்தியாசம் தெரியாமல் புலன் பெயர் தமிழன் அவதியுற்றான்.

(பேனாவை வாளாகப் பாவிக்கலாம் என்பதை மட்டும் தெரிந்திருந்த கியூறியஸ்க்கு பேனாவை சைக்கிள் செயினாகவும் பாவிக்கலாம் என்பதை உணர்த்திய பொதிகை உட்பட!)

இது போதாதென்று, நள்ளிரவில் பேயைப் போல, உலவின தொலைநகல் மொட்டை நோட்டீஸ்கள்... உதயன்களுக்கும் சூரியன்களுக்கும் போட்டியாய், உதயச் சந்திரன்கள்!

கோயில் பிரச்சனையா? வானொலி உரிமைப் பிரச்சனையா? தலைமறைவான சீட்டுக்காரனா?

மக்கள் மன்றத்தில் நீதி கேட்க வந்தன மொட்டை நோட்டீஸ்கள்.

இந்த அநியாயத்தைக் கேட்பார் யாருமே இல்லையா?

தமிழனுக்கு என்ன வேடிக்கை தானே! பரபரப்போடு வாசித்தான். புல்லரித்தான். புன்னகைத்தான். வாசித்த முடிந்த பின்னால் ஒன்றில் மா அரித்தான். மற்றதை அடுத்தவருடன் பகிர்ந்து கொண்டான், யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று.

கியூறியஸைப் பொறுத்தவரைக்கும், தமிழன் மனம் உவந்து மற்றவனோடு பகிர்ந்து கொண்டது மொட்டை நோட்டீஸ்கள் மட்டும் தான்!

தமிழனிடம் நீதி கேட்டு வந்து போட்டுடைத்த உண்மை விளம்பிகளும் நலன் விரும்பிகளும் இந்த மொட்டைக் கடிதக் கலாசாரத்தை கனடியர்களுக்கும் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஆளாளுக்கு ஆளாளைப் பற்றி, கனடிய அரசின் சகல மட்டங்களுக்கும், தமிழர்கள் தொடர்பு கொள்ளும் சகல அலுவலகங்களுக்கும் தமிழன் தமிழனைப் பற்றி மொட்டைக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறான்.

தமிழ்த் தேசிய வார்த்தைப் பிரயோகத்தில் சொல்வதாயின், தமிழன் தமிழனையே காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறான். பண்பாட்டுப் பாரம்பரியம்!

ஊரில் பெட்டிஷன் அடிப்பதில் பேர் போன சிலர் இங்கே பத்திரிகையும் நடத்துகிறார்கள். தங்கள் எழுத்துத் திறமையை பொருத்தமான முறையில் பயன்படுத்தும் இவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியுமா?

அட, இதென்ன கியூறியஸ் மொட்டைக் கடிதம் பற்றிச் சொல்கிறானே என்று நீங்கள் தாடியைச் சொறியக் கூடும். காரணம் இருக்கிறது.

கியூறியஸூம் ஒரு காலத்தில் மொட்டைக் கடிதம் எழுதியவன் தான்.

களவும் கற்று மற என்பது போல கியூறியஸூம் மொட்டையை எழுதி மறந்திருக்கிறான்.

ஆசிரியர் சென்ற தடவை வாத்யார் எம்.ஜி.ஆர் மாதிரி 'தன்னை வாழ வைத்த தெய்வங்களுக்கு அன்புக் காணிக்கை செலுத்தி' பலருடைய மனதைத் தொட்டிருக்கிறார் போலிருக்கிறது. அதில் தன்னுடைய கல்லூரி அதிபர் பற்றியும் தனக்கு எழுத்தறிவித்த அந்த இறைவர்கள் பற்றியும் சொல்லியிருக்கிறார்.

இந்த ஆனானப்பட்ட எழுத்தறிவித்த இறைவர்களுக்கே மொட்டைக் கடிதம் எழுதியவன் தான் கியூறியஸ்.

அடப் பாவி!

நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்று பகிரங்கமாய் சவால் விடப் போய், நீறாகிப் போகவோ, நெற்றியில் பொட்டு வைக்கப்படவோ கியூறியஸ் என்ன மாங்காய் மடையனா?

அந்த உண்மையை எப்படிங்க என்ர வாயாலேயே சொல்றது?

ஆசிரியர் போலவே கியூறியஸூம் அடி(போட்ட)களார்களின் பாசறையில் பயின்றவன் தான். அடிகளார்கள் யேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே கியூறியஸ் போன்றோர்க்கு நன்றாகவே பூசை போட்டார்கள்.

அந்தக் கால கட்டத்தில் தான், நாகாஸ்திரமாக மொட்டைக்கடிதம் ஒன்றைப் பாவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு கியூறியஸ் உள்ளானான்.

நடந்த கதை இது தான்!




கியூறியஸ் உயர்தர வகுப்பில் பயின்ற போழ்தில், ஓர் ஆசிரியை அவன் வகுப்பிற்கு பாடம் பயிற்றுவிக்கலானார். ஆசிரியை ஒழுங்காகத் தான் கற்பித்து வந்தனர். அவ்வாசிரியையின் எழிலையும் அழகையும் வர்ணித்திடல் ஒவ்வாதெனினும் அவர்தம் பேரழகை எடுத்தியம்பல் இவ்விடை பொருத்தமாமே. கியூறியஸ் ஆயின மாணாக்கர்க்குக் கற்பித்த காலையில் தான், அவ்வாசிரியைக்கு பெரியோர் கூடி திருமணப் பொருத்தம் நிச்சயிக்கப்பட்டது.

ஆசிரியையும் தன் வருங்காலக் கணவரின் படத்தைத் தன் மாணாக்கர்க்குக் காட்டிப் பெருமை கொண்டனர். பொறியில் வல்லார் அவர் பொருத்தமாய் இருந்தாரன்றே.

அவ்விடை தான் தோன்றியது மிகுந்தொரு பிரச்சனையே.

அப்படியொரு பெரிய பிரச்சனையும் இல்லை. ஆசிரியை வகுப்பிற்கு வருவார். பேசாமல் மேசையில் உட்கார்வார். கனவில் ஆழ்வார், கன்னத்தில் கை வைத்தபடி.

கியூறியஸ் கூட்டத்திற்கு என்ன பிரச்சனை? ஆசிரியை பேசாமல் உட்கார்ந்தால், பிறகென்ன ஜாலி தானே. சினிமா முதல் கனவுக்கன்னிகள் வரைக்கும், அரசியல் முதல் எல்லாம் வரைக்கும் பேசிப் பேசிப் பொழுது போயிற்று.

நாட்கள் நீண்டன, மாதங்களாயின. ஆசிரியை பாடம் படிப்பிப்பதற்கான எந்த சகுனங்களும் தென்படுவதாயில்லை. தினசரி கனவுக் காட்சி தான்.

பரீட்சை நெருங்க, கியூறியஸ் கூட்டத்திற்கு பயம் வேறு பிடிக்கத் தொடங்கி விட்டது.

இந்தப் பிரச்சனையை யாரிடம் சொல்வது?

அதிபரிடம் போய் சொல்ல முடியுமா, எங்களுடைய ரீச்சர் தன் வருங்காலக் கணவன் பற்றி கனவு காண்கிறார் என்று.

வீட்டிலும் சொல்ல முடியாது.

தீவிர மந்திராலோசனையின் பின் அதிபருக்கு மொட்டைக் கடதாசி எழுதுவதாக கியூறியஸ் தலைமையிலான மத்திய குழு உண்மை விளம்பிகள் தீர்மானித்தனர்.

இருப்பினும் காட்டிக் கொடுக்கும் கயவர்களால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை மனதில் கொண்டு ஆசிரியர்களுக்குப் பந்தம் பிடிப்பவர்கள் தவிர்க்கப்பட்டு, கியூறியஸ் தலைமையில் திட்டம் தீட்டப்பட்டது.

மாணவர்கள் எழுதுவது போல் மொட்டைக்கடிதம் எழுதினால், வகுப்பு முழுவதற்குமே பூசை நடக்கும்... யேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே.

காட்டிக் கொடுக்கும் கயவர்களுக்கு பூசை நடப்பதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அப்பாவிகளான நாங்கள் தண்டிக்கப்படுவதில் எந்த நியாயமும் இல்லையே.

எனவே, மாணவர்கள் வீட்டே போய் பெற்றோருக்குச் சொல்லி, அந்தப் பெற்றோரில் யாரோ உண்மை விளம்பிகள் மொட்டைக் கடிதம் எழுதியது போல இருக்கக் கூடியதாக கடிதம் எழுதப்பட்டது.

அங்கே தான் கியூறியஸின் மணிமூளை வேலை செய்தது.

ஆசிரியை கற்பிக்காமல் இருந்தால், அதைப் பற்றி அறியாமல் இருப்பதன் மூலம், அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்காமல் இருப்பதன் மூலம் அதிபரும் அதற்கு உடந்தையாகிறார். அவரையும் குற்றம் சாட்டுவது போல கடிதம் அமையக் கூடாது.

எனவே அவருக்கு ஐஸ் வைக்க வேண்டியது கட்டாயம்.

கடிதத்தின் இறுதி வரிகள் கியூறியஸின் ஆலோசனைப்படியும் வற்புறுத்தல்படியும் பின்வருமாறு எழுதப்பட்டது.

'எங்கள் பிள்ளைகளின் ஒழுக்கத்தில் நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். ஆனால் அவர்களின் எதிர்காலம் தான் கேள்விக்குறியாகியுள்ளது'

ஒரே போடு!

ஆமா, மொட்டைக் கடதாசி எழுதுகின்ற ஒழுக்கமான பிள்ளைகள்.

சரி, கடிதம் எழுதியாயிற்று. யாழ் பெரிய தபாலகத்திற்கு அருகில் வசித்த நண்பன் இரவு பதினொரு மணிக்கு தபால் அலுவலகத்தில் கடிதத்தைச் சேர்த்தான்.

மறுநாள் காலை பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னால் ஆங்கிலத்தில் புரியாத ஜெபம் சொல்லி முடிய, உயர்தர மாணவர்கள் எல்லோருக்கும் கூட்டம். அதிபர் அடிகளார் எல்லோரையும் உட்கார வைத்துச் சொல்கிறார்.

'இன்று காலையில் எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது'.

பகீர் என்றது எங்களுக்கு. ஆளையாள் பார்த்துக் கொண்டோம். ஆரோ அள்ளி வைச்சிட்டாங்களோ? காட்டிக் கொடுக்கும் கயவர்களுக்கு தகவல் கசிந்து விட்டதோ? பகிரங்கமாய் பிரப்பம் பூசை?

'எனக்கு ஒரு பெற்றோர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதில் உள்ள விசயம் உங்களுக்குத் தேவையில்லை'

அதிபர் சிரிக்கிறார், அர்த்தபுஷ்டியுடன்!

சொல்ல வேண்டிய தகவல் சேர வேண்டிய இடத்திற்கு போய் சேர்ந்திருக்கிறது.

'அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிற ஒரு விசயம் முக்கியமானது'.

அதிபர் கடிதத்தை எடுத்து வாசிக்கிறார்...

'எங்கள் பிள்ளைகளின் ஒழுக்கத்தைப் பற்றி நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம்'.

அடுத்த வரியை வாசிக்கவில்லை. 'அவர்களின் எதிர்காலம் தான் கேள்விக்குறியாக உள்ளது.'

அடிகளாருக்கு பெருமை தாங்கவில்லை. தன்னுடைய சகாப்தத்தின் கீழ், தன் மாணாக்கர்களின் ஒழுக்கம் பற்றி பெற்றோர் புளகாங்கிதம் அடைந்திருக் கிறார்கள்.

அந்த நாலைந்து ஒழுக்கமான மாணவர்களும் தங்களுக்குள்ளே பார்த்துக் கொள்கிறார்கள், சுத்தி இருக்கிற இந்தப் பரதேசிகள் எல்லாம் தங்களையும் ஏதோ ஒழுக்கத்தின் பிரதிநிதிகளாக நினைத்துக் கொண்டிருக்கிறார்களே என்று.

கியூறியஸின் மணிமூளையில் வந்துதித்த அந்த ஒரு வசனத்தை வைத்து அதிபர் அடிகளார் முக்கால் மணி நேரம் பிரசங்கம் செய்கிறார்.

தன்னுடைய மகத்தான சாதனைக்கு உரிமை கோர முடியாத சூழ்நிலையில், கியூறியஸ் அந்தப் பெருமையை மிகுந்த தன்னடக்கத்துடன் மௌனமாக ஏற்றுக் கொள்கிறான். கூட்டம் முடிந்து வந்ததும், பத்து மணிக்கு வரும் இடை வேளை வரைக்கும் சிரிப்பை அடக்கி வைத்து, கியூறியஸ் கூட்டம் வயிறு வலிக்கச் சிரித்தது.

இருந்தாலும், அதிபர் நீதி கேட்ட எங்கள் கோரிக்கைக்கு பதிலளித்ததாய் இல்லை. அவர் ஆசிரியையுடன் பேசியிருக்கக் கூடும். அந்த ஆசிரியையின் கனவுக் காட்சி பின்னரும் தொடர்ந்தது. பின்னால் திருமணம் நடந்து வயிற்றில் பிள்ளையோடு வந்து ஆசிரியை கற்பித்தார். திருமணம் முடிந்த பின்னால், வீட்டில் நடத்தும் டியூஷன் வகுப்புகளிற்கு வரச் செய்து ஒருவாறாகப் பாடத் திட்டத்தைப் பூர்த்தி செய்தார்.

அவரே வகுப்பாசிரியராக இருந்ததால், புதன்கிழமைகளில் எங்களுக்கு இறுதிப்பாடம் அவர் மேற்பார்வையில் கூட்டமாக நடைபெறும். பாடல்கள், பேச்சுக்கள், சிறுகதைகள் என்று எங்களது கலை உணர்வை ஊக்குவிக்கும் வகையில் வழி வகுக்கப்பட்டிருந்தது.

வயிற்றில் பிள்ளையோடு இருந்த ஆசிரியைக்கு குறும்புக்காரக் கியூறியஸ் அந்தக் கூட்டத்தில் பாட்டுப் பாடி மரியாதை செலுத்தினான், தெரிந்த இரண்டே இரண்டு வரிகளை வைத்து.

'முத்துமகள் வந்துனக்கு பிறப்பா, அவ முத்தமிட்டா வந்து என்னை முறைப்பா' என்று. சிரித்த முழு வகுப்போடும் அந்த ஆசிரியை சேர்ந்து சிரித்தார். கியூறியஸின் ஆசீர்வாதப்படியே அவருக்கு பெண் பிள்ளையும் பிறந்தது.

இப்படியாக கியூறியஸும் தனக்கு எழுத்தறிவித்த இறைவர்களுக்கு அவர்கள் அறிவித்த எழுத்தைக் கொண்டே மொட்டைக் கடிதம் எழுதினான். இதுதான் கியூறியஸ் களவும் கற்று மறந்த வரலாறு.

ஒரு வரியிலேயே தலையில் ஐஸ் வைத்து, நொக் அவுட்டாக்கும் வித்தையை நன்றாகத் தெரிந்து கொண்டவன் கியூறியஸ். ஆனாலும் வெறுமனே புகழ்ந்து யாரையும் பப்பாசி மரத்தில் ஏற்றும் பழக்கம் கியூறியஸ்க்கு கிடையாது.

அதைப் போல, உண்மை விளம்பிப் பெயரில் அவதூறுகளை எழுதும் வக்கிர புத்தியும் கிடையாது.

மனதுக்குப் பட்டதை எழுதுவான், நெற்றியில் 'கண்' வைக்கும் பயமின்றி! அதற்காகப் பேட்டை ரவுடிக் கணக்கில் சைக்கிள் செயினோடு அலைவதும் இல்லை!

இன்றும் தன்னை வாழ வைத்த அந்த தெய்வங்களை கியூறியஸும் என்றும் அன்புடனும் நன்றியோடும் நினைவு கூருவான். சிறுவயதில் தன் மீது அன்பு காட்டிய அனைத்து ஆசான்களுக்கும், இம்மை மறுமையின்றி கையாலும் பிரம்பாலும் விளாசித் தள்ளியவர்கள் உட்பட, கியூறியஸ் நன்றியுள்ளவனாகத் தான் இருக்கிறான்.

தன்னுடைய பதவிக்கால சகாப்தத்தில், ஒழுக்கமான ஒரு தலைமுறையை உருவாக்கிய பெருமையுடன், வானகம் சென்ற அதிபருக்கு மட்டும் கியூறியஸ் செலுத்தும் வணக்கம்...

'தந்தையே, பாவியாயிருக்கிற என்னை ஆசீர்வதியும்' என்பது தான். ■


அறிமுக அட்டைகள்

துண்டுப்பிரசுரங்கள்

நினைவு மலர்கள்

விழா மலர்கள்

சஞ்சிகைகள்

கல்வெட்டுக்கள்

அச்சுத் தேவைகள்
அனைத்தும் ஒரே இடத்தில்...

Palm Print Inc.
1345 Morningside Ave #8
416 284 9545